
மரண
மண்டலம்!
லயன்
காமிக்ஸ்
மின்னல் படையின் முழு நீள சாகஸம்!
ரூ 5/-

# புக் - மார்கெட்

## விற்பனைக்கு

திகில் :

1. அப்பல்லோ படலம்
2. மர்ம ஏரி

லயன் :

3. பாதாளப் போராட்டம்
4. தலைவாங்கிக் குரங்கு
5. இரத்த முத்திரை
6. கொலைப் பசி
7. திக்குத் தெரியாத தீவில்

## தேவை

லயன் :

1. லயன் சூப்பர் ஸ்பெஷல்
2. மர்ம முகமூடி
3. ஆப்பிரிக்க சதி
4. மர்ம எதிரி
5. மனித எரிமலை
6. சதி வலை

திகில் :

7. சிரிக்கும் மரணம்
8. மர்ம மண்டலம்

வாங்க - விற்க தொடர்பு கொள்க :
M. அகமது ஷா,
12/A-4, அண்ணாநகர், திருவண்ணாமலை - 606601

## விற்பனைக்கு

லயன் :

1. தங்க நகரம்

திகில் :

2. சிவப்புப் பாதை
3. கொலைகாரக் கானகம்
4. இரத்தப் படலம் III

மினி லயன் :

5. புரட்சித் தீ
6. மாயத் தீவில் அலிபாபா

தொடர்பு கொள்க :
D. விஸ்வநாதன்
Q. No. 17/6, D.C. IV,
I.A.F. ஆவடி, சென்னை - 55

## விற்பனைக்கு

லயன் :

1. இரும்பு மனிதன்
2. கொலைப் படை
3. சதி வலை
4. கடத்தல் குமிழிகள்
5. மந்திர ராணி

## தேவை

1. எத்தனுக்கு எத்தன்
2. சதுரங்க வெறியன்
3. ஆப்பிரிக்க சதி
4. கோடை மலர் '86
5. இரத்த முத்திரை
6. மரண ராகம்
7. டிராகன் நகரம்

தொடர்பு கொள்
S. அருண் முருக
6-99, திருச்சி மெயின்
செஜ்ஜநாயக்கன்பட்டி
சேலம் - 636 20

# ஹாட்-லைன்!

நண்பர்களே,

ன்பது மாத இடைவெளிக்குப் பின் மின்னல் படையினர் ஒரு முழு நீள த்துடன் உங்களை சந்திக்க வந்துள்ளனர். ''மரண மண்டலம்'' வழக்கமான கதைகளிலிருந்து மாறுபட்டது - இரண்டாம் உலகப் போர் முடியவிருக்கும் வாயில் நடைபெற்றதொரு நிஜ நிகழ்ச்சியோடு நிறையக் கற்பனையைக் கலந்து வாக்கப்பட்ட கதை இது! தத்ரூபமான சித்திரங்கள் கதைக்கு ஒரு ப்ளஸ் ன்ட்! படித்துவிட்டு உங்கள் எண்ணங்களை எழுதுங்களேன்...!

''ஸ்பாட்-லைட்'' பகுதிக்கு ஏராளமான சித்திர சிறுகதைகள் குவிந்து வரு ன! நம் வாசகர்களிடையே இத்தனை திறமை பதுங்கியுள்ளதென்பதைப் க்கும் போது மலைப்பாக உள்ளது! ஒரு சில வாசகர்கள் காமிக்ஸ் வரைவதற்கு nk உபயோகிக்க வேண்டும் - எந்த பேப்பர் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ட்டு எழுதியுள்ளனர். காமிக்ஸ் வரையும் technique பற்றி விளக்கமாக ''கதை சொல்லும் படங்கள்'' தொடரில் விரைவில் எழுதவிருக்கிறேன்! சரி தானா?

இந்த இதழில் ஒரு புதுப்போட்டி ஆரம்பமாகிறது! இதற்கான பரிசோ - நம் சகர்கள் அனைவருக்கும் கிடைக்க வாய்ப்புள்ளது! அது என்னவென்று தெரிந்து ாள்வதற்கு பக்கம் 91ஐ புரட்டுங்கள்!

அடுத்த மாத schedule ல் ஒரு சிறு மாறுதல் உள்ளது! ''இரத்தப் படலம் -பாகம் வேலைகள் முடிந்திடுவதில் தாமதமாவதால் அந்தக் கதை நவம்பர் இதழாக ருக்கிறது! (அக்டோபர் 25ம் தேதிக்குள் கடைகளில் நிச்சயம் கிடைக்கும்) இதழாக மாடஸ்டி பிளைஸி & கார்வின் தோன்றும் ''பச்சை வனப் '' ரூ. 4/- விலையில் வருகிறது! ராபின் ஹுட் வசித்த கானகத்தினுள் சென்று டி செய்யும் அட்வென்சர்கள் உங்களை திகைக்கச் செய்யப் போகின்றன!

பதிப்பு செய்வதற்கான 'Editor's Top Ten' பட்டியலிலிருந்து ஐந்து கதை மட்டும் தேர்வு செய்திடக் கேட்டிருந்தேனல்லவா? அதன்படி select ள்ள கதைகள் :

1) தலைவாங்கிக் குரங்கு
2) மாஸ்கோவில் மாஸ்டர்
3) கோடை மலர் '86
4) டிராகன் நகரம்
5) மனித எரிமலை

எந்தக் கதை - எப்போது மறுபதிப்பாகும் என்ற விபரத்தை அடுத்த மாதம் எழுதுகிறேன்!

அதுவரை - happy reading!

அன்புடன்,

ஆசிரியர்

# அடுத்த வெளியீடு

## மாடஸ்டி & கார்வின் தோன்றும்

# பச்சை வளப் பாவை



# "மாதம் ஒரு வாசகர்"



| | |
|---|---|
| வாசகர் பெயர் | : R.T. முருகன் வயது : 20 |
| முகவரி | : C/6, Senthuran Colony, Madipakkam, Madras |
| கல்வித் தகுதி | : B.Com IInd Year |
| பொழுது போக்குகள் | : வெளிநாட்டு தபால் தலைகள், நாணயங்கள் Comics Collection. |
| லயன் காமிக்ஸ் படிப்பது எத்தனை காலமாய்? | : லயன் முதல் வெளியீட்டிலிருந்து |
| லயன் காமிக்ஸ் அறிமுகமானது எப்படி? | : தந்தையின் மூலம் |
| நீங்கள் படிக்கும் இதர பத்திரிக்கைகள் என்ன? | : தி ஹிண்டு, துக்ளக், ஓம்சக்தி நாவல்கள், கல்கி, Sportstar, India Today |
| இதுவரை வந்த லயன் காமிக்ஸ் கதைகளில் நீங்கள் மிகவும் ரசித்துப் படித்தது எந்தக் கதை? | : எத்தனுக்கு எத்தன், பாதாளப் போராட்டம், டிராகன் நகரம் ஸ்பைடர் (வெறியன்) ரசிகன். |
| உங்களைத் தவிர வேறு யாரும் வீட்டில் லயன் காமிக்ஸ் படிக்கிறார்களா? | : ஆம். தங்கை அப்பா. |
| படித்து முடித்த பின் இதழை ன்ன செய்வீர்கள்? | : சேர்த்து வைத்து இருக்கிறேன். |

# மின்னல் படையினர்



கேப்டன் மாத்யூஸ்
(அணித்தலைவர்)



ஜூல்ஸ் கார்சியா



ஜான் ஸ்மித்



மிக் பால்ஸ்கி

மின்னல் படையினர் தோன்றும்

# மரண மண்டலம்!




## அத்தியாயம் 1: அதிரடி ஆரம்பம்!




ஜெர்மானியக் கமாண்டர் பைனுக்குலரைக் காவல் பொறுப்பிலிருந்த சார்ஜெண்ட் கையில் கொடுத்தார்...
நீங்கள் சொன்னது சரிதான் மேஜர் சார்! சர்ச் லைட் பிரிவுக்கு போன் செய்யவா?
யெஸ் யெஸ்!
மறுகணம் பிரகாசமானதொரு ஒளி வெள்ளம் கடலில் பாய்ந்தது...
ஜெர்மானியர்கள் நம்மைப் பார்த்து விட்டனர்!
இதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் கடற்படையின் பீரங்கிகள் முழங்கின! முதல் இலக்காக ஒளியைப் பாய்ச்சிய சர்ச் லைட் மீது குண்டுகள் பாய்ந்தன..
தொலைந்தோம்! ஒரு பெரிய கடற்படையே இங்கு வந்துள்ளது!



விரைவில் பிரிட்டிஷ் கடற்படைக்குப் பதிலளிக்கும் வகையில் ஜெர்மன் பீரங்கிகள் முழங்கின...
கரையில் உள்ள கண் காணிப்புக் கோபுரம் நேரடியாகத் தாக்கப் பட்டு விட்டது!
தீயணைப்பு படை வீரர்களை முன்னே அனுப்புங்கள்!
காக்கி சீருடை அணிந்த பிரிட்டிஷ் வீரர்கள் கரையை நோக்கிச் செல்லவிருந்த கலத்திற்கு இறங்கினர்...
மின்னல் படையினரே சீக்கிரம்! இன்று இரவு முழுவதும் நீங்கள் அதிலேயே ஊஞ்சலாட முடியாது!
''மின்னல் படை'' என்பது அசகாய அதிரடிப்படை வீரர்கள் அடங்கிய ஒரு குழு! அவர்களின் தலைவர் கேப்டன் மாத்யூஸ்!
இதோ வருகிறது பீப்பாய் ஜான்!


வேகமாக இறங்கிய ஜான் ஸ்மித், கை வழுக்கியதால் திடீரென்று கீழ் நோக்கி விழுந்தான். மாத்யூஸும் மற்றவர்களும் தங்கள் மீது அவன் விழுந்திடா வண்ணம் தலைதெறிக்க ஓடினர்...!
அந்த உருவம் மட்டும் உங்கள் மேல் விழுந் திருந்தால் பூச்சி போல் நசுங்கிச் செத்திருப் பீர்கள்!
ராட்சஸன் போலிருந்த ஜான் மூச்சு வாங்கிக் கொண்டிருந்த போதே தாய்க் கப்பலை விட்டு கலம் விலகிப் போயிருந்தது...
பயணம் ஆரம்பித்து விட்டது பாய்ஸ்..! நடக்கப் போகும் வாண வேடிக்கை ஓசிதான்! அதற்கென கட்டணம் எதுவும் வசூலிக்க மாட்டோம்!
கரையை நெருங்கிய போது ஜெர்மானியர்களின் குண்டுகள் வந்து விழுந்தன...!
ஜூல்ஸ், திரும்பி வருவதற்கும் சேர்த்து எங்களுக்கெல்லாம் ரிட்டர்ன் டிக்கெட் எடுத்திருக் கிறாயல்லவா..?
ஓ யெஸ் கேப்டன்! படகை நீங்கள் தவறவிட்டால் பணம் வாபஸ் பண்ணி விடுவேன்!
கேப்டன் மாத்யூஸ், பிரான்ஸ் நாட்டுக் காரனான ஜூல்ஸின் வேடிக்கைப் பேச்சை ரசித்தார்...
இது போன்ற அதிரடிப் பயணங்களுக்கு ஜூல்ஸ் ஒரு வரப்பிரசாதம்! சுற்றி இருக்கும் அனைவரையும் பணியிலிருக்கும் ஆபத்தை மறக்கச் செய்து விடுகிறான்!


ஜெர்மானியர்கள் சரமாரியாகத் தாக்கிய போதிலும் நேசநாட்டுக் கடற்படையின் குண்டு மழை வெற்றி கொள்ளத் தொடங்கியது...
நமது பீரங்கிகள் தரைமட்ட மாகின்றன..
ஆமாம் மேஜர் சார்! ஆனால் நம்மால் முடிந்ததை செய்து விட்டோம்!
ஜெர்மானியர்களின் குழப்பத்தை சாதகமாய் பயன்படுத்தி கரை நோக்கி அதிரடிப்படையினர் முன்னேறினர்...!
கமான்! மணல் மேட்டி லிருக்கும் ஜெர்மானி யர்களை முதலில் தீர்த்துக் கட்டுவோம்!
கரையின் இடது புறம் மின்னல் படையினர் இறங்கியிருந்தனர் -
மேட்டின் மீதிருக்கும் ஜெர்மானியர்கள் பற்றி நாம் கவலைப்பட வேண்டாம்! நமக்கு வேறு முக்கிய பணி உள்ளது!


எனவே மாத்யூஸும் அவருடைய படையினர்களும் எதிரி களின் பார்வையிலிருந்து தப்பிப் பதுங்கினர்...
அங்கே சரியான மோதல் நடக்கிறது வெடிச் சப்தம் காதைப் பிளக்கிறது!
மோதலில் எழுந்த சப்தம் சன்னமாகிக் கொண்டே போனது.
அதோ சரியான நேரத்தில் லாரி வந்து விட்டது!
நான்கு ரோடுகள் சந்திக்கும் இடம் கேப்டன்!
லாரி நின்றது - அதிலிருந்து ஒரு இளைஞன் இறங்கி நின்றான். மாத்யூஸ் அவனுடன் சங்கேத பாஷையில் உரையாடினார்...
கரிபால்டி!
கமிஷியா ரோசா!
இந்த இத்தாலிய இளைஞன் ஒரு தீவிர தேச பக்தியாளன்! நேச நாடுகளுடன் ரகசிய ரேடியோ தொடர்பு வைத்திருக்கும் புரட்சி அமைப்பில் அவனும் ஒருவன்..
நானும் உங்களுடன் வரலாமா கேப்டன்?
வேண்டாம் பிரதர்! ஏற்கனவே ரிஸ்க் எடுத்து லாரியைக் கொண்டு வந்துள்ளாய். இனி எங்களுடன் உள்ள பீப்பாய் மனுஷன் லாரியை ஓட்டுவான்!


விரைவில் டிரக் புதிய பாதையில் புறப்பட்டுச் சென்றது...
குட் பை மிஸ்டர் இத்தாலி!
அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கட்டும் மிஸ்டர் பிரான்ஸ்!
ஜான் வேகமாக டிரக்கை செலுத்தினான். 15 நிமிடத்தில் ராணுவ பாதுகாவல் உள்ள பாலம் ஒன்று கண்ணில் தெரிந்தது...
நில்!
துப்பாக்கிகள் முழங்கிய அதே கணத்தில் கேப்டன் மாத்யூஸின் ஸ்டென் கன் மரண ராகம் இசைத்தது.
நிற்காமல் போ ஜான்!


பாலத்தில் ஒரு வண்டி மட்டுமே செல்ல வழி இருந்ததால் இரு காவலர்களும் 'துண்டைக் காணோம் - துணியைக் காணோம்' என்று சுவர் ஏறிக் குதித்தனர் ..
முட்டாள் நாஜிகளே, நள்ளிரவில் குளித்து மகிழுங்கள்!
டிரக் பாலத்தைக் கடந்து சென்ற போது, குறைந்த ஆழம் உள்ள நீரில் இருந்து இரண்டு உருவங்கள் எழுந்தன..
ஐயோ! என் கை! என் கை போச்சு!
அருகிலிருந்த டெலிபோனுக்கு ஒரு நாஜி வீரன் கஷ்டப்பட்டுப் போனான்...
உஷார் உஷார்!
மூன்றாவது சோதனைச் சாவடியி லிருந்து...
ஆனால் உஷார் செய்தி பரவும் முன்பு மின்னல் படையினர் தங்களுடைய இலக்கை அடைந்திருந்தனர் - கைப்பற்றப் பட்ட டிரக்கைக் கொண்டு ஜான் தடுப்பு வேலிகளைத் தகர்த்தான்...
கீழே குதியுங்கள் தோழர் களே!


லாரி நின்ற மறுகணம் அதிரடிப்படை வீரர்கள் கீழே துள்ளிக் குதித்தனர் ..
என்ன செய்ய வேண்டும் என்று உங்களுக்கு தெரியும்! ம்ம்ம் க்விக்!
ஜான் தன்னுடைய இலக்கை அடைந்ததும் தன் பையிலிருந்து வெடி மருந்துக் கட்டி ஒன்றை வெளியில் எடுத்தான்...
ஹேய் மெய்யாலுமே இது வெடிக்குமில்லையோ ஜுல்ஸ்?
குண்டுப் பையா... அது நானே என் கைப்படச் செய்தது! கட்டாயம் வெடிக்கும்!
இறங்கிச் சென்ற ஜான் கனத்த பூட்டுப் போடப்பட்டிருந்த இரும்புக் கதவைச் சந்தித்தான் -
ப்பூ! மோசமான பூட்டு! பொம்மை சுத்தியலைக் கொண்டு சின்னக் குழந்தையே இதைத் திறந்து விடும்!
அவனுடைய கனத்த ஷூ வேலையை முடித்தது..
மடேர்
இனி குண்டு வைக்க வேண்டியது தான்!


காரியத்தை முடித்துவிட்டு மேல் மட்டத்திற்கு வர சில விநாடிகளே ஆனது. ஆனால் அதற்குள் ஜெர்மானியர்கள் அங்கு வந்து விட்டனர்...
டுமீல்!
உஷார்! அங்கு ஒரு பன்றிப் பயல் நிற்கிறான்!
ஒரு தோட்டா ஜானின் மண்டையை உரசிக் கொண்டு பறந்தது. மறுகணம் அவன் தரையில் சாய்ந்தான்..
நாச வேலை எதுவும் நடந்திருக்கிறதா என்று பார்ப்போம். சீக்கிரம்! அவன் வெடிகுண்டு வைத்திருந்தால் விரைவில் அதை செயல் இழக்கும்படி செய்ய வேண்டும்...
ஜான் செத்துவிட்டான் என அவர்கள் நினைத்து விட்டிருந்தனர். ஆனால் கடும் பிரயத்தனம் செய்து ஜான் எழுந்து நின்றான்.
உப்! இங்கே இருப்பது நல்லதல்ல!



நினைவுகள் ஊசலாடிய நிலையில் 20 - 30 அடி வேக நடை போட்டான். பின்னர் ஒரு பள்ளத்தில் போய் விழுந்தான்...
தேடுங்கள்! தொடர்ந்து தேடுங்கள்!
மீண்டும் ஜான் எழுந்து நின்ற போது அவன் கண் எதிரே பூமியே வெடித்துச் சிதறியது!
ஆ!
அதைத் தொடர்ந்து மற்ற கிடங்குகளும் பயங்கரமாய் வெடித்தன. மின்னல் படையினர் தூரத்து வேலியருகே வேடிக்கை பார்த்தனர்...!
நம் பசங்கள் எல்லோரும் விலகி வந்து விட்டார் களல்லவா?
கேப்டன், திட்டமிட்ட படியே நடந்து கொண்டிருக் கிறோம்! ஏதும் பிரச்னை வராது!


ஆனால் இடையில் ஜூல்ஸ் புகுந்தான்...
கேப்டன் - நம் ஆட்களில் யாரோ ஒருவன் சிக்கலில் மாட்டியிருக்க வேண்டும்! கொஞ்ச நேரம் முன்பு ஜெர்மானியர்கள் கூச்சலிடுவதை நான் கேட்டேன்!
நாம் சீக்கிரமாய் இடத்தைக் காலி பண்ணாவிட்டால் இன்னும் ஏராளமான கூச்சலைக் கேட்க வேண்டி வரும்!
டிரக் அருகில் திட்டமிட்டபடி மின்னல் படையினர் கூடினர். எல்லாரும் உள்ளனரா என கேப்டன் மாத்யூஸ் சரிபார்த்தார்..
ஜானைக் காணோம்!
ஜான் 'கவனித்த' கிடங்கு அதோ - அங்குதான் உள்ளது!
குண்டு வெடித்துச் சிதறியதால் ஏற்பட்ட பள்ளத்தை நோக்கி மாத்யூஸ் பரபரப்புடன் ஓடினார். மற்றவர்களும் தொடர்ந்தனர்...
ஜானின் தொப்பி!
இதோ - நாஜி அதிகாரி ஒருவனின் தொப்பியும் கிடக்கு கேப்டன்! என்ன நடந்திருக்கும் என எளிதில் ஊகிக்கலாம்..


மிக் பால்ஸ்கியின் தொண்டை அடைத்தது - அப்போது உரத்த கூச்சல்களைக் கேட்டனர்...
முழு ராணுவமே வந்து கொண்டிருக் கிறது! கமான்!
மின்னல் படையினர் டிரக்கிற்குத் திரும்பினர். மாத்யூஸ் வண்டியை இருளில் வேகமாகக் கிளப்பினார்..
சுட்டுத் தள்ளுங்கள்! அந்த வண்டியை நிறுத் துங்கள்!
ஆனால் டிரக்கை யாராலும் தடுக்க முடியவில்லை. முன்பு வந்த அதே பாலத்தின் வழியாக சீறிச் சென்ற போது இரு காவலர்களும் செயலற்று நின்றனர்!
ஜானின் மரணம் - வீர மரணம்! அந்த ஆயுதக் கிடங்கை அழித்து தரை மட்டமாக்கும் நமது நோக்கத்தை நிறைவேற்றுவதில் அவன் பங்கை செய்து விட்டான்!


மின்னல் படையினர் பணியை முடிக்கும் வரை கப்ப லில் இருந்து கடற்கரை மீது தாக்குதல் நீடித்தது. அதன் பின்னர் கப்பல் பின் வாங்கியது...
ஜெர்மானியர்கள் நமது தாக்குதலை சமாளிக்க புதிய படைகளையும் பீரங்கிகளையும் கொண்டு வந்துள்ளனர். ஆனால் அவர்கள் தயாராகும் முன்பு நாம் வெகு தூரத்திற்குச் சென்று விடுவோம்!
கப்பலை அடைந்த மின்னல் படையினரிடம் கனத்த சோகம் விரவியிருந்தது..
அவன் நினைவாக இது ஒன்று மட்டும் தான் நம்மிடம் உள்ளது..!
பாவம் ஜான்! அவனை மாதிரி ஒரு நண்பன் கிடைக்க மாட்டான்!
நான் ஜோக் அடிக்கும் போதெல்லாம் அவன் எப்படிச்சிரிப்பான்? இனி ஜோக் அடிக்க யாருக்கு மனம் வரும்?
அதே நேரம் நாசவேலையால் அழிந்த ஆயுதக்கிடங்கில்...
கமாண்டர் சார், இங்கு பணியில் இருந்த லெப்டி னண்ட் ஹோர்ஸ்ட் பற்றிய ஒரே தடயம் இந்தத் தொப்பிதான். அவரும் அவருடனிருந்த 2 ரோந்துப் படை வீரர்களும் வெடித்துச் சிதறி இருக்கக் கூடும்!


கமாண்டர் கவலையுடன் கருகிப் போன தொப்பியை ஆராய்ந்து கொண்டிருந்த போது ஒரு வேதனைக் குரல் அவரது கவனத்தைத் திருப்பியது...!
அங்கு என்ன சப்தம்?
தெளிவாக சிந்திக்க இயலாத நிலையில் தடதடக்கும் காலடி யோசை மட்டுமே கேட்டது ஜானுக்கு!
அதிரடிப் படை பன்றி! அவனைப் பிடியுங்கள்! அவன் எனக்கு உயிருடன் வேண்டும்!
அரை டஜன் ஜெர்மானிய வீரர்கள் ஜான் மீது பாய்ந் தனர். சளைக்காமல் ஜான் அவர்களுடன் சண்டை யிடத் துவங்கினான்...!
அவனைச் சீக்கிரம் இங்கு கொண்டு வாருங்கள்!
எதிரிகளின் எண்ணிக்கை அதிகரிக்க பலசாலியான ஜானால் கூட சமாளிக்க முடியவில்லை!
காவல் கிடங்கிற்கு அவனைக் கொண்டு வாருங்கள்!



கைதியை ஓர் அறையில் தூக்கி எறிந்து விட்டு கதவை டமாரென்று இழுத்து மூடினர்...
பிடிபடும் எல்லா கமாண் டோக்களையும் ரகசிய போலீஸ் வசம்தான் ஒப் படைப்போம்! இப்போதைய ராணுவ உத்தரவு அது! பாதுகாப்பு போலீசைக் கூப்பிடு!
ரகசிய போலீசா? ஜான் கண்ணு... வசமாக மாட்டிக் கிட்டே...!
கமாண்டர் வேறுபக்கம் திரும்பியபடி....
இந்தத் தளத்திற்கு நீ புதியவனே லெப்டி னன்ட்?
யெஸ். கமாண்டர்! ஹால் போர்டு பிளான் தொடர் பான திட்டத்தில் பயிற்சி எடுத்துக் கொண்டு இருந்தேன். ஆனால் பரீட்சையில் தோல்வி அடைந்து விட்டேன். உங்களையும் அந்தத் திட்டத்தில் சேர்க்கவில்லை எனக் கேள்விப்பட்டேன்!
மறுகணம் அந்த லெப்டினன்ட் மீது 'லொள்' என்று பாய்ந்தார் தலைமையதிகாரி. ஜெர்மன் பாஷையில் நடந்த சம்பாஷணை அத்தனையும் ஜானுக்குப் புரிந்தது-
வாயை மூடடா முட்டாளே! யாரிடமும் 'ஹால்போர்டு' என்ற பெயரைக்கூட சொல்லிவிடாதே! பரம ரகசியத்தின் அர்த்தம் உனக்குத் தெரியாதா ராஸ்கல்?


அதன் பிறகு யாரும் எதுவும் பேசவில்லை... பலமணி நேரங்கள் ஜான் தனிமையில் வாடினுன். மறுநாள் மாலை...
ஒரு வேன் ஜன்னல் எதிரே நிற்குதே...!
அவனையறியாமல் கிலியில் ஜான் புலம்பத் தொடங்கினான்...
நான் எதிர்பார்த்ததற்கு முன்பே என்னைப் பிடித்துச் செல்ல ரகசிய போலீஸ் வந்துவிட்டதோ?
ஆனால் வேன் டிரைவர் வண்டியை விட்டு இறங்கிய உடன், அவனை உடனடியாக அடையாளம் கண்டு கொண்டான்.
நீயா மிஸ்டர் இத்தாலி?
உஷ்!
அந்த இளைஞன் வேறு யாருமில்லை - முந்தின இரவு மின்னல் படையினர் தொடர்பு கொண்ட அதே இத்தாலிய இளைஞன்தான்
யாரோ ஒரு கமாண்டோ பிடிபட்டதாகக் கேள்விப் பட்டோம்! எங்களுடைய தலைவர் உடனே என்னை இங்கு அனுப்பி வைத்தார்!


இரும்புச் சங்கிலியுடன் இணைக்கப்பட்ட தொரு கொக்கியை ஜன்னல் கம்பியில் மாட்டி அதி வேகத்தில் வேனைக் கிளப்பினன். காவலர்கள் இடையூறு இல்லாததால் ஐந்தே நிமிடத்தில் ஜெயில் உடைப்பு வெற்றி கரமாக அரங்கேறியது-
சபாஷ் இத்தாலி!
ஜான் ஜன்னல் வழியாக் நெளிந்து வெளியே குதித்தான். அப்போது...
நாசமாய் போச்சு! ஒருவன் கம்பி நீட்டு கிறான்...!
ஜான் உருவத்தில் பெரிதாக இருந்தாலும் வேகத்தில் சளைத்தவனில்லை-
உனக்குத் தேவை தூக்க மாத்திரை மிஸ்டர் -
இந்தா வாங்கிக் கொள்!
ஜெர்மானிய லெப்டினன்ட் தரையைத் தொடும் முன்பு மயங்கி விட்டான். ஜான் வேனை நோக்கி ஓடி வந்தான்...
போய்க் கொண்டேயிரு பையா!சீக்கிரம்! நான் குப்பைகளோடு பயணம் செய்கிறேன்!


ஜான் வேனுக்குள் பாய்ந்த அதே கணம் தோட்டாக்கள் சீறிப்பாய்ந்தன.
சங்கிலியும், கொக்கியும் பெருத்த ஓசை யெழுப்பியவாறு வேன் வாசலை நெருங்கிய போது ஒரு நாஜி லெப்டினன்ட் வந்து சேர்ந்தான்...
உஷார்! நாச வேலைக் காரர்கள்! ஆனால் இவர்கள் தப்பிப் போக முடியாது...!
அந்த நாஜியின் துப்பாக்கி முழங்கியிருந்தால் தப்பியோடும் படலம் அகோர முடிவிற்கு வந்திருக்கும். ஆனால்...
ஐயோ!


சங்கிலியுடன் இணைக்கப்பட்டிருந்த கொக்கியில் சிக்கிய நாஜி அதிகாரியும் குப்பை வண்டியுடன் இழுத்துச் செல்லப்பட்டான்.
வண்டி ஒரு பள்ளத்தில் குதித்துச் சென்ற போது கொக்கியிலிருந்து விடுபட்டான் நாஜி அதிகாரி...
எங்கே போகிறோம் பையா?
காத்திருக்கும் படகிற்கு!
அவர்கள் கடற்கரையை அடைந்தபோது இருட்டி விட்டது.உள்ளூர் புரட்சிக் கும்பலின் மீதப் பேர் காத்திருந்தனர்...
இங்கிருந்த ஒரு நாஜி காவலனின் வாயை அடைத்து புதருக்குள் தூக்கி எறிந்து விட்டோம்.
படகில் பெட்ரோல் நிறைய உள்ளது!


அடுத்த ஸ்டாப் நமது நேச நாடுகளின் கடற் கரையில் தான்!
முடிந்தால் டெர்மோலிக்கு சீக்கிரம் போ - என்னுடைய படைப்பிரிவினர் அங்கே தான் இருப்பார்கள்


மறுநாள் காலை மின்னல் படையினர் முகாமில்...
இந்த எழுத்து வேலையே பெரிய ரோதனை!


கேப்டன்! கேப்டன்! சீக்கிரம் வெளியே வாங்க. க்விக்!


ஜான்! ஜான்! நான் காண்பது கனவா? நனவா?


ஒரு வழியாகக் கொண்டாட்டம் முடிந்த போது பிரிந்தவர்கள் கூடினல் சந்தோஷத்திற்குப் பஞ்சமேது? ஜான் தனது கதையைச் சொன்னான்...
...அந்த இத்தாலிய இளைஞன் என்னைக் காப்பாற்றி இங்கு கொண்டு வந்தான். நரகத்திலிருந்து தப்பி வந்திருக்கிறேன். நடந்தது இதுதான்...! நோ... நோ.. இன்னொரு சங்கதியும் உள்ளது. சிறையிலிருந்தபடி நாஜிக்கள் இருவர் பேசுவதை நான் ஒட்டுக் கேட்டேன்...
தான் அங்கு கேட்டவற்றை அப்படியே ஒப்பு வித்தான் ஜான். மாத்யூஸ் சிந்தித்தபடி பேசினர்...
சுவாரஸ்யமான விஷய மாகத் தெரிகிறது ஜான்! புதிரான ''ஹால்போர்டு திட்டம்'' பற்றி அந்தக் கமாண்டரும் லெப்டினன்ட்டும் என்ன பேசினர்களோ, அதை ஒரு வார்த்தை கூட விடாமல் அப்படியே எழுதிக் கொடு. அந்தத் தகவலை நான் புலனய்வுத் துறைக்கு அனுப்பி வைக்கிறேன்.
அடுத்து சில நாட்களுக்குப் பயிற்சிகள் நடைபெற்றன...!
ஜான்... ராணுவத் தலைமை யகத்திலிருந்து நேற்று இரவு ஒரு செய்தி வந்தது. ''ஹால் போர்டு திட்டம்'' பற்றி புலனய்வுத் துறையினரால் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லையாம் அதை இனி மறந்து விடலாம்!


அத்தியாயம் 2 : தலைமறைவு
6 வாரங்களுக்குப் பின்னர் மின்னல் படையினருக்கு போர் நடக்கும் முன்னணிப் பகுதிக்குப் போகும்படி உத்தரவு வந்தது...
திடீரென்று எடுக்கப் பட்ட முடிவு போல் தெரிகிறதே கேப்டன்?
ஒரு அவசர நடவடிக்கை ஜான்! சிக்கலில் உள்ள நம்முடைய நேசப்படையினரை மீட்கப் போகிறோம். நாஜிகள் அவர்களைச் சுற்றி வளைத்து விட்டனர்!


மின்னல் படையினர் போய்ச் சேர்ந்த இடம் ஒரு மலைப்பகுதி கிராமம். பீரங்கி குண்டு மழைக்கிடையே ஓர் இடத்தில் இறங்கினர்...
ஒட்டு மொத்தமாக வராமல், பரவலாகப் போவோம்!


நல்ல வரவேற்புத் தருகிறார்கள்!


பெரும் தாக்குதலை சமாளித்து விட்ட மின்னல் படையினரை கைத்துப்பாக்கியால் எதிர்த்தனர் நாஜிக்கள்
பிரான்ஸ் வாழ்க! நாஜிகள் ஒழிக!


எதிரிகள் மத்தியில் பாய்ந்து அவர்களை அடித்து வீழ்த்தினர்.
உப்!
கும்!


மல்யுத்தமாக மாறியது ஆட்டம்
அடச்சே- துப்பாக்கி அடைச்சுக் கிடுச்சே!


ஒரே ஒரு எந்திரத் துப்பாக்கி இன்னமும் குண்டுமழை பொழிந்த வண்ணம் இருந்தது. குண்டு ஜான் கவனத்தை அது ஈர்க்க- பெரிய பாறை ஒன்றைத் தூக்கினான்...
அசுரகதியில் எந்திரத் துப்பாக்கியை நோக்கிப் பாறை பறந்தது...
ஐயோ!
மலையின் கீழ்பகுதியில் சிக்கியிருந்த ஜெர்மானியர்கள் நிலை குலைந்தனர். உயிர் பிழைக்க எண்ணியவர்கள் ஓட்டமெடுத்தனர்...
முற்றுகையை நாம் தகர்த்து விட்டோம்! சிக்கிக் கிடந்த அமெரிக்கப் படையுடன் இனி தொடர்பு கொள்ள முடியும்!



அமெரிக்க வீரர்கள் மின்னல் படையின் நடவடிக்கையைக் கவனித்துக் கொண்டு இருந்தனர்-
அவர்களுக்கு சூப்பரான வரவேற்பு கொடுக்கத் தயாரா குங்கள்!
நாஜிகளைத் துவைத்து தொங்கப் போட்டு விட்டீர்கள்!
விரைவில் இரு தரப்பினரும் சகோதரர்கள் போலப் பழகினர்...
உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி கேப்டன்! எதிரிகளின் தொடர் தாக்கு தலை முறியடித்தோம்! நீங்கள் வராதிருந்தால் எங்கள் பாடு திண்டாட்ட மாகியிருக்கும்!
உங்களுக்கு உதவ முடிந்ததில் மகிழ்ச்சி அடைகிறோம்! இப்போது நாம் இங்கிருந்து கிளம்புவதுதான் நல்லது! ஜெர்மானியர்கள் பெரிய படைபலத்துடன் மீண்டும் இங்கு வருவார்கள்
எங்கள் படையைச் சேர்ந்த பலர் படுகாயம் அடைந் துள்ளனர். அவர்களுக்கு அவசர சிகிச்சை அளிக்க வேண்டும்!
ஒ.யெஸ்! உங்களுக்குக் கைகொடுக்க என்னுடைய ஆட்களை அனுப்பு கிறேன்!


காயம் அடைந்தவர்களை அங்கிருந்து வெளி யேற்றும் பணி விரைவில் நடந்தது...
ஒரு வழியாக வேலை முடிந்தது! காயமடைந்த வர்களுள் சில ஜெர்மானியர்களும் உள்ளனர்!
வெயிட்!
காயமடைந்த நிலையில் நண்பர்கள்- எதிரிகள் என்ற வேறுபாடின்றி அனைவரை யும் வேறிடத்திற்கு மாற்றிட முடிவு செய்யப் பட்டது. நாஜிக்களில் ஒருவனை வெளியே கொண்டு சென்றபோது ஜான் ஸ்மித் திகைப்பில் கத்தினான்...
அட... அட... சார்ஜென்ட் நாம் மீண்டும் சந்திக் கிறோம்!
அந்த சார்ஜென்ட் யாரையும் அடையாளம் காணும் நிலையில் இல்லை... கண்கள் செருக தட்டுத்தடுமாறிப் பேசினான்.
கேப்டன்- நான் சொன் னேனே ஒரு சார்ஜெண்ட் -அது இவன்தான்! ''ஹால் போர்டு திட்டம்'' பற்றிப் பேசியது இவன்தான்!
மோசமான நிலையில் இருக்கிறான்! காயமடைந்த திலிருந்து அவனது மனநிலையும் பாதிக்கப் பட்டுள்ளது!


திடீரென்று ஜானின் பேச்சு சப்தம் அந்த சார்ஜென்டை உசுப்பிவிட்டது. வேதனையையும் மீறி ஆங்கிலத்தில் புலம்பத் துவங்கினான்...
ஹால்போர்டு... யெஸ், யெஸ் ஹால்போர்டு... பிரிட்டனில் உள்ள கிராமம்...! ஆனால் அங்கு என்னைச் சேர்த்துக் கொள்ள மறுத்து விட்டார்கள்!
மறுகணம் சார்ஜென்ட் மயக்க மடைந்தான். ஆனால் அவனைக் கொண்டு சென்றபோது மாத்யூஸும் ஜானும் அவனுக்கு அருகிலேயே சென்றனர்...
அவனுக்கு மீண்டும் நினைவு திரும்புகிறது கேப்டன்!
எங்களுடைய எதிர் பார்ப்பை நீ பூர்த்தி செய்ய வில்லை என்று ஹால் போர்டில் என்னிடம் சொன்னார்கள்!


புதிர் பெரிதாகிக் கொண்டே போக மாத்யூஸ் அவனிடம் கேள்வி கேட்க முயற்சி செய்தார். ஆனால் மீளா உறக்கத்தில் அவனது கண்கள் மூடிவிட்டன!
செத்துவிட்டான்! இதில் இருந்தாவது புலனாய்வுத் துறையினரால் ஏதாவது கண்டுபிடிக்க முடிந்தா லொழிய, அவன் எதைப் பற்றிப் புலம்பினான் என்பது தெரியாமல் போய்விடும்!
நேச நாடுகளின் புலனாய்வுத் துறையால் எதுவும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் 1944ம் ஆண்டு துவக்கத்தில் அவர்கள் முன்பு ஆஜராகும்படி மாத்யூஸுக்கு அழைப்பு வந்தது...
கேப்டன்! நமக்குத் தெரிந்த ஒரே ஒரு ஹால்போர்டு- இங்கிலாந்தின் தென் பகுதியில் உள்ள பாராசூட் வீரர்களுக்கான பயிற்சி தளம்தான்! நீங்களும் உங்கள் படையைச் சேர்ந்த சிலரும் அங்கு போய் ஏதாவது கண்டுபிடிக்க முடிகிறதா என்பதைப் பாருங்கள்!
மறுநாள் ஜான் ஸ்மித், ஜூல்ஸ் மற்றும் மிக் ஆகிய மூவருடன் கேப்டன் மாத்யூஸ் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்றார்...
ஹால்போர்டில் சந்தேகப் படும்படி ஏதேனும் தெரிந்தால் லண்டனில் உள்ள புலனாய்வு டைரக்டரிடம் தகவல் தெரிவிக்கவும்! முதலில் லண்டன் போய் அவரை சந்தித்துவிட்டு நீங்கள் நேரடியாக ஹால் போர்டுக்குப் போங்கள்!
பச்சைத் தொப்பி அணியும் நம்மை சிகப்புத் தொப்பி அணியும்படி ஏன் சொன்னார்கள் என்று எனக்கு இன்னும் புரியவில்லை கேப்டன்?


விமானப்படை கலம் ஒன்று அவர் களைச் சுமந்து கொண்டு லண்டன் நோக்கிப் பறந்து கொண்டிருந்தது..
ஹால்போர்டைச் சுற்றி யுள்ள பகுதி பாராசூட் பயிற்சியாளர்களுக்காக ஒதுக்கப்பட்டது ஜுல்ஸ்!
யாருக்கும் சந்தேகத்தைக் கிளப்பாமல் நாம் துப்புத் துலக்கும் பணியை முடித்தாக வேண்டும்! அதனால் நாமும் பாராசூட் வீரர்களின் உடுப்பிலேயே செயல் படுவோம்!
விமானம் பிரிட்டனை நோக்கி கடல்மேல் பறந்தபடி இருந்தது-திடீரென்று வயர்லெஸ் மூலம் ஒரு எச்சரிக்கை வந்தது...!
அடையாளம் தெரியாத விமானம் ஒன்று பின் தொடர் கிறது...
திரியின் மெசர்ஸ் மிட் 109 விமானம்!



நாஜி பைலட் தன் துப்பாக்கிகளை முழக்க -மின்னல் படையினரின் விமானம் காய மடைந்தது-
தொலைந் தோம்!
விமானத்திற்குள் மின்னல் படைவீரர்கள் குப்புறப்படுத்தபடி இருந்தனர்!
டுமீல்! டுமீல்
நன்றாகக் குனிந்து படுத்துக் கொள்ளுங்கள்!
நேசநாடுகளின் விமானம் எதிர் தாக்குதல் நடத்தியது-
வசமாய் மாட்டி விட்டாய்! நேரடியாகப் பரலோகம் போ!
கரும் புகைப்படலத்தை எழுப்பிக் கொண்டு தரையை நோக்கிப் பாய்ந்தது நாஜி விமானம்!
யானைக்கு ஒரு கால மென்றால் - பூனைக்கும் ஒரு காலம் வராமலா போகும்?


கடலில் விழுந்து தீப்பந்துகளாக வெடித்துச் சிதறியது!
உங்களுக்கு ஒன்றுமில்லையே கேப்டன்?
லேசான அதிர்ச்சிதான் லெப்டினன்ட்! காயம் எதுவும் இல்லை!
பின்னர் தொடர்ந்த பயணத்தில் குறுக்கீடு எதுவும் ஏற்படவில்லை. லண்டனில் நீண்ட நேரம் தங்கிவிட்டு மின்னல் படையினர், சாலைவழியாக ஹால்போர்டுக்குப் புறப்பட்டுச் சென்றனர்...
ஹால்போர்டு போய்ச் சேர இன்னும் மூன்று மணி நேரம் ஆகும்!
ஜாலியாக ஒரு தூக்கம் போடுவோம் கேப்டன்!
அவர்களுக்காகத் தரப்பட்டிருந்த டிரக்கில் பயணம் செய்தனர்-
இதோ ஹால்போர்டு கிராமம் தெரிகிறது!


பார்த்தால் சரியான தூங்கு மூஞ்சி கிராமமாகத் தெரி கிறது! இங்கே விவகாரம் ஏதாவது கண்டு பிடிப்போமா என்பது சந்தேகமே!
பிரச்சனையின் நிஜமான தன்மை பற்றி மாத்யூஸ் கற்பனையில் கூட நினைத்துப் பார்த்திருக்க முடியாது!
ராணுவ வீரர்கள் தங்கக் கூடிய ஓட்டல் ஒன்று அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. மாத்யூஸுக்கு அங்கிருந்த ஓர் அறை காட்டப்பட்டது...
எனக்கு ஒதுக்கப்பட்ட அறை நன்றாக இருக்கிறது. என்னுடன் வந்தவர் களுக்கு என்ன செய்து உள்ளீர்கள் மிஸ்டர்...?
என் பெயர் சான்டர்ஸ். வராண்டாவின் கடைசியில் உள்ள ஓர் அறை அவர் களுக்காக ஒதுக்கப் பட்டுள்ளது கேப்டன்!
அன்று பிற்பகலில் மாத்யூஸும் அவரது ஆட் களும் சுற்றுப் பகுதியை 'டூர்' அடித்தனர்-
இதுபோன்ற வேலைக்கு மிலிட்டரி போலீஸ்தான் லாயக்கு கேப்டன்!
மிலிட்டரி போலீசை விட நம்மால் இன்னும் சுதந்திர மாக சுற்றித் திரியமுடியும் ஜான்- கண்களையும் காது களையும் திறந்து வைத்துக் கொண்டு - ஏதாவது விஷயம் சிக்குகிறதா என்று பார்ப்போம்! அந்த நாஜி சார்ஜென்ட் சொன்ன தற்கு இங்கே ஏதாவது தொடர்பு இருக்கிறதா பார்ப்போம்!
C. KNIGHT
R. MERRELL


ஒரு மைலுக்கு அப்பால் விமானத்திலிருந்து பாராசூட் வீரர்கள் குதித்து பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தனர்...
இதைப் பார்க்கும் போது நமக்குப் பாராசூட் பயிற்சி கொடுத்ததெல்லாம் நினைவுக்கு வருகிறது கேப்டன்! வானிலிருந்து குதிப்பது உற்சாகமான அனுபவம்!
ஒரு மாதமாய் ஹால்போர்டில் முகாமிட்டும் பிரயோஜனமில்லை! இந்த நிலையில் ஒரு நாள் இரவு...
'ஒயிட் சுவான்' ஒட்டலில் தங்கியுள்ள கேப்டன் மாத்யூஸுக்கு ஒரு செய்தி வந்துள்ளது! அது நீங்கள் தானா சார் ?
யெஸ். இப்படிக் கொடு பார்ப்போம்!
அந்தச் செய்தி தலைமையகத்திலிருந்து வந்து இருந்தது. அதைப்படித்த மறுகணம் மாத்யூஸ் விறைத்துப் போய் நின்றார்..
மோசமான
கேப்டன்?
புதிரான தகவல் சான்டர்ஸ்!
மாத்யூஸ் அவர்களை அனுப்பி விட்டு தன் அறைக்குச் சென்றார். செய்தியை மீண்டும் படித்தார்.
"... எங்களுக்கு கிடைத்த தகவல்படி ஒரு காலத்தில் அவன் கருப்புச் சட்டை அமைப்பில் இருந்திருக்கிறான் - போர் துவங்குவதற்கு முன்பு ஒவ்வொரு ஆண்டும் ஜெர்மானிக்குப் போய் வந்துள்ளான். அவனைக் கவனிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்..."


ஓட்டல் பூட்டப்பட்டுவிட்ட போதும் பாரில் மூன்று வாடிக்கையாளர்கள் இருந்தனர்...
வாங்க நண்பர்களே குடித்து மகிழ்வோம்!
ஜான், ஜூல்ஸ், மற்றும் மிக் மூவரும் தங்களுடைய கிளாஸ்களை காலி செய்து விட்டு அறைக்குச் சென்றனர். சிறிது நேரம் அங்கேயே இருந்த சாண்டர்ஸ், கவுன்டருக்குப் பின்னால் குனிந்து, அங்கிருந்த சுரங்கப்பாதைக் கதவைத் திறந்தான்...
அவனது நடவடிக்கையே மாறிப் போயிருந்தது. விளக்கைப் போட்ட உடன் பீப்பாய் ஒன்றை நெருங்கினன். ஆனால் அது ஒரு 'போலி'ப் பீப்பாய்...
ஹால்போர்டு ஒன்று பேசுகிறேன். ஹால்போர்டு இரண்டு - நான் பேசுவது கேட்கிறதா? ஓவர்!
ஒரு குரல் அவனுக்குப் பதில் கூறியவுடன் ஒலி பெருக்கியை இயங்கச் செய்தான்...
உங்களுக்குத் தேவையான தகவல் கிடைத்து விட்டது! தாக்குதல் நடக்கவிருக்கும் தேதி மே மாதம் 14. மறுபடியும சொல்கிறேன்- மே மாதம் 14ந் தேதி! ஓவர்.


கொடுத்த தகவல் சேர வேண்டியவர்களுக்குச் சேர்ந்து விட்டதா என்பதை அறியக் காத்திருந்தான். ஆனால் அதற்குள் சுரங்கப்பாதை திறக்கப்படும் சப்தம் கேட்டது...
சரண்டர்ஸ்... நீ ஒரு நாஜி உளவாளி என்று எனக்குக் கிடைத்த தகவல் மெய்யாகி விட்டது!
மாத்யூஸ்!
ஹால்போர்டு இரண்டிலிருந்து ஹால்போர்டு ஒன்றுக்கு - உங்களுடைய செய்தி கிடைத்தது. புரிந்து கொண்டோம்...
சான்டர்ஸ் தன்னிடமுள்ள துப்பாக்கியை எடுக்கும் முன் மாத்யூஸின் பிஸ்டல் முழங்கியது...
டுமீல்!
ஆ!
ஓட்டல்காரன் கீழே விழுந்தான். மாத்யூஸ் குதித்து அவன் அருகில் நின்றார்...
உன்னுடைய வேஷம் கலைந்து விட்டது சான்டர்ஸ்! நீ சொன்ன தகவல் கிடைத்து விட்டது என்றார்களே - அப்படி என்ன தகவல் அனுப்பினாய்? உண்மையைச் சொல்லி விடுவது தான் நல்லது!
என்னிடம் எதையும் கறக்க முடியாது!
அதற்குள் மாத்யூஸின் சகாக்களும் அவருடன் சேர்ந்து கொண்டனர்-



கல்லுளி மங்கனும் மௌனம் சாதித்தான். அப்போது திடீரென்று ரேடியோ தொடர்பு வந்தது...
ஹால்போர்டு இரண்டு கூப்பிடுகிறேன் - ஹால்போர்டு ஒன்று... நான் பேசுவது கேட்கிறதா...?
பதில் சொன்னா லென்ன கேப்டன்?
விஷயம் ஏதாவது கிடைக்கக் கூடும்!
நோ! அங்கிருப்பவனுக்கு சான்டர்ஸின் குரல் தெரியும்! புதிதாக என் குரலைக் கேட்டால் சுதாரித்துக் கொள்வான்! உடனே தலைமை யகத்திற்கு போன் பண்ணி, இந்த ரேடியோ தொடர்பு எந்த அலைவரிசையில் வருகிறது என்பதைக் கண்டு பிடிக்கச் செய்வோம்!
லண்டனுக்குத் தகவல் தரப்பட்டது. சான்டர்ஸ் கிராமத்தில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டான். அதன்பிறகு மீண்டும் அவர்கள் கரங்க அறைக்கு வந்தனர்...
எந்த சப்தமும் இல்லை! ரேடியோ அலை வரிசையைக் கொண்டு எந்தப் பகுதியில் இருந்து ஒலிபரப்பப்படுகிறது என்பதை நம் ஆட்கள் கண்டுபிடித்து விட்டால் அதிர்ஷ்டம் தான்!
24 மணி நேரத்திற்குள் புலனாய்வுத் துறையின் அதிகாரி ஒருவர் ஹால்போர்டுக்கு வந்து சேர்ந்தார்...
சான்டர்ஸ் வாயைத் திறந்தானா கர்னல்?
நோ! ஆனால் "ஹால் போர்டு இரண்டு" ஆங்கிலக் கால்வாய்க்கு அப்பால் உள்ளது என்பதை மட்டும் தெரிந்து கொண்டோம்! பிரெஞ்சுப் புரட்சிப் படையினரின் உதவியோடு அந்தச் செய்தி ஒலிபரப்பப்பட்ட தேசமான இடத்தைக் கண்டு பிடித்து விட்டோம்!


கர்னல் பிரான்ஸ் நாட்டின் வடபகுதியைக் காட்டும் வரைபடத்தை விவரித்தார்.
இதோ- இந்தப பகுதியில் இருந்துதான் ஒலிபரப்பப் பட்டது! ஜன நடமாட்டம் தடை செய்யப்பட்ட பகுதி இது! ஏதோ ரகசியமான விவகாரம் இங்கே அரங்கேறுகிறது! அது என்னவென்பதை நீங்கள்தான் கண்டுபிடிக்க வேண்டும்.
பிரெஞ்சுப் பகுதியினுள் பாராசூட்டில் நீங்கள் இறங்க வேண்டும்! உள்ளூர் புரட்சியாளர்களின் உதவி உங்களுக்குக் கிடைக்கும்!
விரைவில்-
ஏதோ கோழிக் குஞ்சை கூண்டில் போட்டு எடுத்துச் செல்வது போலப்படுகிறது எனக்கு!
நீயா கோழிக் குஞ்சு? கிழிஞ்சது போ!
பிரான்ஸ் கடற்கரைப் பகுதியை மிக உயரத்தில் பறந்து கடந்தனர். அதன் பின்பு படிப்படியாக உயரத்தைக் குறைத்தனர். அப்போது திடீரென்று...
ஜெர்மானியர்களின் இரவு நேரப் போர் விமானங்கள்! வசமாக மாட்டிக் கொண்டோம்!


அதே நேரம்- ஜெர்மானிய விமானங்களுக் கிடையே ரேடியோ மூலம் செய்திகள் பரி மாறப்பட்டன-
அது பிரிட்டிஷ் விமானம் சார்! அதை நான் தகர்த்து விடவா...?
நோ. நோ. இடியட்! ''ரகசிய மண்டலத்தை'' நோக்கிப் போய்க் கொண்டிருப்பது தெரியவில்லையா உனக்கு? ''ஹால்போர்டு திட்டத்திற்கும்'' அதற்கும் சம்பந்தம் இருக்கும்!
நாஜி படை விமானங்கள் அமைதியாகக் கடந்து சென்றதைக் கண்ட பிரிட்டிஷ் விமானி திகைப்பில் ஆழ்ந்தார்- விமானத்தின் உயரத்தை மேலும் குறைத்தார்...
ஜெர்மன் விமானங்கள் ஏன் நம்மை ஒன்றும் செய்யாமல் கடந்து சென்றன என்று தெரியவில்லையே! எதுவாக இருந்தாலும் சரி, நாம் வரவேண்டிய இடத்திற்கு வந்து விட்டோம். கீழே குதிக்க 10 நிமிடம் தான் இருக்கு. இதோ எச்சரிக்கை விளக்கு எரியத் துவங்கி விட்டது!
மாத்யூஸும் அவரது தோழர்களும் காத்திருந்த பகுதியில் சிகப்பு விளக்கு எரிந்தது...
தயாராக இருங்கள்! பச்சை விளக்கு வந்த உடன் நாம் குதிக்க வேண்டும்!



சற்றைக்கெல்லாம்-
மிக் பால்ஸ்கியின் பாராசூட் கொஞ்ச நேரத்திற்கு விரியவில்லை! அது விரியும் வரை அனைவருடைய இதயமும் நின்று விட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது...
அப்பாடி எல்லாம் சரியாகி விட்டது!
மிக்கின் கணிப்பு தவறு! வீசிய சூறைக் காற்று எடை குறைந்த மிக்கை நதியின் பக்கமாக கொண்டு சென்றது...
ஒரு குளியல் காத்திருக்கிறது என்று நினைக்கிறேன்!
பாராசூட் வீரர்களை தரையிலிருந்தோர் தீவிரமாகக் கண்காணித்துக் கொண்டிருந்தனர்-
ஓ! மை காட்! ஜெர்மன் ராணுவ டிரக் வருகிறது!


பாராசூட்டை ஓரளவு சமாளித்து மிக் தரையைத் தொட்டபோது எதிரே டிரக் ஒன்று வேகமாக வருவதைக் கண்டான்...
லாரியின் சக்கரத்திற்குள் என்னை இழுத்துச் சென்று விடும்!
ஜெர்மன் டிரைவரால் தன் கண்களை நம்ப முடியவில்லை...!
நாசமாய் போச்சு!
உடம்புடன் இணைக்கப்பட்ட கொக்கியைப் 'பட்'டென்று அவிழ்த்து விட்டு மிக் நழுவிக் கொண்டான்! அதே நேரம் பாராசூட் குடை லாரியின் கண்ணாடியை அணைத்துக் கொண்டது!
செத்தேன்!


பாதை தெரியாத நிலையில் டிரைவர் லாரியின் பிரேக்கை ஓங்கி மிதித்தான். தறிகெட்டுப் போய் நதியினுள் பாய்ந்த லாரியினுள்ளிருந்து அபயக்குரல்கள் எழுந்தன...!
என்னாச்சு?
எல்லாரும் தொலைந் தோம்!


லாரியில் எழுந்த சப்தங்கள் அது ஜெர்மானியர்கள் எனக் காட்டியது. ஆனால்- அவர்கள் அணிந்திருந்த சீருடைகளோ அப்படிக் காட்டவில்லையே!


லாரி கொஞ்சம் கொஞ்சமாக நதியின் அடியில் போய் மறைந்தது...


ரோட்டோரத்திலிருந்து ஒரு தொப்பியை மிக் மீட்ட போது மற்றவர்களும் வந்து சேர்ந்து விட்டனர்! அது சிவப்பு நிறத் தொப்பி- பிரிட்டிஷ் பாராசூட் வீரர்கள் அணியும் வகை!
லாரியின் பின்பக்கத்திலிருந்து இது விழுந்தது..
நேசக் குரல்கள் அப்போது அங்கே கேட்டது. பிரெஞ்சுப் புரட்சிப் படையினர் வந்து கொண்டிருந்தனர்.
நாம் எதிர் பார்த்தது இவர்களைத் தான்!
நீ இங்கிருந்து அவர்களோடு பேசிக் கொண்டிரு ஜுல்ஸ்! எங்களுக்கு ஒருவேலை உள்ளது!
ஜுல்ஸும், புரட்சிப் படையின் தலைவனும் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.
வெல்கம் நண்பர்களே
என்ன ஆச்சு இங்கே?


நடந்ததை சுருக்கமாக ஜூல்ஸ் விவரித்து தன் அணியினருடன் சேர்ந்து கொண்டார். லாரியிலி ருந்து ஜெர்மானியர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன!
ஆறு பேரும் செத்து விட்டனர். டிரைவர் மட்டும் ஜெர்மன் சீருடையில் உள்ளான். பாக்கி ஐந்து பேரும் பிரிட்டிஷ் பாராசூட் வீரர்களின் உடுப்பில் உள்ளனர்!
கேப்டன் மாத்யூஸுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் புரியத் தொடங்கியது. புரட்சிப்படையினரிடம் திரும்பினார்.
ஆனால் அத்தனை பேரிடமும் ஜெர்மன் அடையாள வில்லை இருந்தது. டிரைவரின் அடையாள வில்லையைத் தவிர பாக்கி அத்தனையிலும் ''ஹால்போர்டு திட்டத் தின் உறுப்பினர்'' என்று எழுதப்பட்டுள்ளது. பாராசூட் பயிற்சியிலும், ஆங்கில புலமையிலும் தேர்ச்சி பெற்றவர்கள் என்றும் உள்ளது!
தோழரே... ஒரு எமர்ஜென்சி என்றால் உங்களுடன் எப்படித் தொடர்பு கொள்வது என்பதை முதலில் சொல்லுங்கள்; அப்புறம் இந்த 'மரண மண்டலம்'
எங்கு உள்ளது என்று காட்டுங்கள்; கடைசியாக இந்த ஜெர்மன்களின் சடலங்களை அப்புறப்படுத்த உதவுங்கள்!
திட்டத்தை மற்றவர்களிடம் விவரித்து விட்டுப் புறப்பட்டனர் மின்னல் படையினர்.
தெரிந்தே சிங்கத்தின் குகைக்குள் நுழைகிறோம்! என்ன நடக்குமோ - அது ஆண்டவனுக்கே வெளிச்சம்!


மாத்யூஸ் தன்னுடைய பதவியைக் குறிக்கும் பேட்ஜை அகற்றிவிட்டு மற்றவர்களுடன் பாராசூட் வீரராகவே நடந்து சென்றார்... நெடுநேர நடைக்குப் பின் ஒரு சாலைத் தடுப்பு தென்பட்டது-
உன்னுடைய வேலையை ஆரம்பி ஜான்! நான் சொன்னது நினைவிருக்கிறதல்லவா?
யாரங்கே? நில்லுங்கள்!
சரளமாக ஜெர்மன் மொழியில் புகுந்து விளையாடினான் ஜான். முன்னே வர அனுமதி வழங்கப்பட்டது. அப்போது ஒரு உயர் அதிகாரி வந்து சேர-
ஹ்ம்ம்ம்....!
லாரியில் மாண்டு போயிருந்த ஜெர்மன் வீரர்களின் அடையாள அட்டைகளை மின்னல் படையினர் கைப்பற்றியிருந்தது பலனளித்தது. ஒவ்வொன்றாகப் படித்த பின்னர் அந்த அதிகாரி திருப்தி அடைந்தான். அவன் முகத்தில் ஒரு விஷமப் புன்னகை!
இங்கிலாந்துக் காரர்களே வருக வருக!
முன்னுள் சென்ற ஜானுக்கு மகிழ்ச்சி பிடிபட வில்லை!
நீங்கள் சொன்னது போலவே நடக்கிறது கேப்டன்!
யெஸ். இந்த 'மரண மண்டலத்தில்' ஜெர்மானியர்கள் என்ன செய்கிறார்களென்று எனக்கு இப்போது புரிகின்றது!
கண்ணில் தென்பட்டிருப்பது 'ஹால்போர்டு திட்டத்தின்' ஒரு துளி என்பது மாத்யூஸுக்குத் தெரிந்திருக்க வாய்பில்லை..!



அத்தியாயம் 3: ஹால்போர்டு - 2
வானில் சந்திரன் எழுந்தபோது சார்ஜென்ட் உடையில் ஒரு ராட்சஸ ஆசாமி கடந்து சென்றான்...
குட்ட நாக்ட்! (ஜெர்மன் பாஷை)
மறுகணம் - நிலம் அதிர ஒரு ராட்சஸக் குரலில் ஆங்காரமாய் கத்தினன் அந்த குரங்கு முக ாமி!
நில்! 'குட்ட நாக்ட்' என்றா சொன்னாய்? அறிவு கெட்ட தடிமுண்டமே - 'குட் நைட்' என்று இங்கிலீஷில் சொல்வதற்கென்ன?
அட ஆண்டவனே! தாய் மொழி போல் அல்லவா ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுகிறான்
தொடர்ந்து கிடைத்த வசை மழையில் ஜான் வாயடைத்துப் போய் நின்றான்-
புரிந்து கொண்டாயா முட்டாளே? இங்கே நாம் எல்லாரும் ஜெர்மானியர்கள் தான் - ஆனால் ஜெர்மன் பாஷையில் ஒரு வார்த்தை கூடப் பேசக்கூடாது.
பிரிட்டிஷ்காரர்கள் போல் உடை அணிய வேண்டும்- அவர்களைப் போல் பேச வேண்டும்- பிரிட்டிஷார் போலவே சிந்திக்கவும் வேண்டும்! புரிகிறதா?
யெ... யெஸ் சார்ஜென்ட்?
மற்றவர்களிடம் ஒரு சில கேள்விகளைக் கேட்டுவிட்டு அவர்களைப் போகும்படி கையசைத்தான்...!
போகும் வழியில் பணியிலுள்ள அதிகாரியிடம் உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்! ம்ம்ம்... க்விக்!


திகைப்பில் வாயடைத்துப் போய் நடையைத் தொடர்ந்தனர். இன்னும் பெரியதொரு ஆச்சரியம் காத்திருந்ததை அவர்கள் அறிய மாட்டார்கள்-
கண்ணில் தெரிவது நிஜம் தானா? நான் பார்ப்பதை நீயும் பார்க்கிறாயா?
அந்தக் கிராமம் அச்சு அசலாக ஹால்போர்டு மாதிரியே உள்ளது!


அவர்கள் நெருங்கி வந்தபோது...
A. BRYAN
G. KNIGHT
இங்கிலாந்திலுள்ள ஹால் போர்டு கிராமத்தின் ஜெராக்ஸ் நகல் போல நிர்மாணித்துள்ளனர்!


எதற்காக கேப்டன்? இங்கிலாந்தில் உள்ள ஒரு கிராமத்தை நகல் எடுத்து கடைகளுக்குக்கூட அதே பெயர்கள் வைத்து கட்டியுள்ளார்களே- ஏன்?
R.MERRELL
அதைத் தானே நாம் கண்டுபிடிக்க வேண்டும்!


டூப்ளிகேட் "தி ஒயிட் சுவான்" ஓட்டலின் வாசலில் பிரிட்டிஷ் சீருடையுடன் ஒரு காவலாளி நின்று கொண்டிருந்தான்...
டூட்டி ஆபீசரை நாங்கள் எங்கு போய் பார்ப்பது?
பாருக்குப் பின்னாலிருக்கும் அறையில் இருக்கிறார்!


அந்த அதிகாரி ஒரு லெப்டினென்ட். அவரது ஆங்கிலப் பேச்சும் பிழையில்லாமலேயே இருந்தது...
இரண்டு மணி நேரத்திற்கு முன்பே உங்களை எதிர் பார்த்தேன். ஐந்து பேர் வருவதாக என்னிடம் சொன்னார்கள். இன்னொருத்தனுக்கு என்னாச்சு?
ஒரு விபத்து நடந்து போச்சு சார். நாங்கள் வந்த டிரக் நதியில் பாய்ந்து விட்டது. டிரைவரும் எங்களுடைய கூட்டாளி ஒருவனும் நதியில் அடித்துச் செல்லப் பட்டுவிட்டனர்!



நீண்டநேரம் இன்டர்வியூ தொடர்ந்தது. இறுதியில் கேப்டன் மாத்யூஸைப் பார்த்துப் புன்னகைத்தான்...
உன் ஆங்கில உச்சரிப்பு நன்றாகவே உள்ளது! என்னளவிற்குப் பேசு கிறாய்!
கிழிஞ்சது போ!
ஜான், மிக், இருவரின் உச்சரிப்பும் பரவா யில்லை என்று சொல்லிவிட்டு ஜுல்ஸ னருகே வந்து நின்றான்-
உன்னுடைய இங்கிலீஷில் எனக்குத் திருப்தி இல்லை! நிறைய பயிற்சி எடுக்க வேண்டும் நீ!
அடச்சே! என்னோட ஆங் கிலம் நன்றாகவே உள்ளது என்று நினைத்துக் கொண்டிருந்தேன்- ஒரு நாஜிப் பன்றி வந்து குறை சொல்கிறானே - அவமானம்!
அவர்கள் கொண்டு வந்திருந்த ஜெர்மானிய அடையாள அட்டைகளுக்குப் பதில் போலி யான பிரிட்டிஷ் அடையாள அட்டைகள் கொடுக்கப்பட்டன. இறுதியில்...
விமான தளத்தில் நீங்கள் தங்க இடம் ஒதுக்கப் பட்டுள்ளது. உங்களுக்கு சூட்டப்பட்ட புதிய ஆங்கிலேயப் பெயர்களை நன்றாக நினைவு வைத்துக் கொள்ளுங்கள். அவ்வளவு தான் - இனி நீங்கள் போகலாம்!
பிரமாண்டமான 4வது பிளாக் கட்டிடத்தில் 'பி' அறை அவர்களுக்கு ஒதுக்கப்பட்டு இருந்தது...
ஒரு பிளாக்கில் 30 பேர் தங்கலாம் - இங்கு இருபது பிளாக்குகள் இருப்பதை எண்ணிப் பார்த்துவிட்டேன்! சுமார் 600 வீரர்களும் அதிகாரிகளும் இந்த விசேஷப் படைப்பிரிவில் உள்ளனர்!


ஜான் ஸ்மித் படுத்திருந்த ஒருவன் மீது கால் தடுக்கி விழுந்தான். ஆத்திரத்தில் எழுந்த அவன் நாய் போல் பாய்ந்தான்...
பார்த்துப் போடா அறிவு கெட்ட முண்டமே!
குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கும் ஆசாமி திடீரென்று எழுந்தபோதும் கூட அருமையான ஆங்கி லத்திலேயே பேசுகிறான்...!
இவனை மாதிரியே எல்லாரும் இருப்பார்களே யானால் அதி அற்புதமாகப் பயிற்சி அளித்துள்ளனர் என்றாகிறது?
வைக்கோலால் ஆன மெத்தை மீது போர்வை போர்த்தியபடி படுத்த மாத்யூஸின் மனதில் எக்கச்சக்கமான சிந்தனைகள்...
ஆக - இதுதான் 'இரண்டா வது ஹால்போர்டு' கிராம மாக்கும்? ஆங்கிலம் பேசக் கூடிய முழுபலத்துடன் கூடிய ஒரு ராணுவம் இங்கு முகாமிட்டுள்ளது
ஆனால் எப்போது, எந்த வகையில் இந்தப் போலி பிரிட்டிஷ் பாராசூட் வீரர்களை உபயோகப்படுத்தப் போகிறார்கள் என்பது தெரியவில்லையே?
மறுநாள் சனிக்கிழமை. பொழுது போக்கு வதற்கும், உடற்பயிற்சிக்கும் ஒதுக்கப்பட்டு இருந்தது...
கும்!
நீயும் முன்னிலை விளையாட்டு வீரன் என சொல்லிக் கொள் கிறயாக்கும்? என்னை மீறி பந்து கோலுக்குள் செல்லவில்லையே!



மின்னல் படையினருக்கு ஓட்டப் பயிற்சி கொடுக்கப்பட்டிருந்தது-
அந்தப் பந்தை இங்கு எடுத்துப் போடு! சீக்கிரம்!
ஹேய், உன்னைத் தான்!
ஜுல்ஸின் அருகே நின்றதொரு ஜெர்மானியன் கிசுகிசுத்தான்.
வேகமாய் போய் அந்தப் பந்தை தள்ளிவிட்டு விடு! அந்த சார்ஜென்ட் ரொம்ப நேரம் காத்திருக்க மாட்டான்!
ஜுல்ஸ் அந்தக் குரங்கு ஆசாமியை அடையாளம் கண்டு கொண்டான். கடந்த இரவில் இவன்தானே ஜான் ஸ்மித் மீது நாய்போல் பாய்ந்தவன்!
கமான்! பந்தை உதைப்பது எப்படி என்று தெரிந்தால் உதைத்துக் காட்டு பார்க்கலாம்!
ஜுல்ஸ் தன் சக்தியெல்லாம் திரட்டி பந்தை ஓங்கி உதைத்தான்...
பந்தை உதைக்கத் தெரியுமா என்றா கேட்கிறாய்?
போருக்கு முன்னால் - இந்த ஜுல்ஸ் பிரான்ஸ் நாட்டின் முன்னிலைப் புட்பால் வீரன் என்பதை இப்போது காட்டுகிறேன்!


துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட தோட்டா போல பந்து காற்றைக் கிழித்துக் கொண்டு அந்த ஜெர்மானியனின் முகத்தைத் தாக்கியது!
ஐயோ!


ஜுல்ஸின் கேலிச் சிரிப்பிற்கிடையே சார்ஜென்ட் மான் மண்ணைக் கவ்வினான்...
ஹா ஹா ஹா!


ஆங்காரமாய் அந்த சார்ஜென்ட் எழ முயன்ற போது மாத்யூஸ் அவசரமாக ஜுல்ஸை அழைத்தார்...
கமான்! அவனுக்கு வெறி பிடிக்கும் முன் ஓடி விடுவோம்!


அந்த வாரம் முழுவதும் ஜூல்ஸ் அந்தத் தடி சார்ஜெண்ட் கண்ணில் படாமலேயே இருந்தார். ஆனால் திங்களன்று...
இப்போது நாம் செய்யப் போவது-
ஆயுதமில்லாமல் மோதல் பயிற்சி! சரிதானே. நான் இந்த அணியினரைப் பார்த்துக் கொள்கிறேன் கார்போரல்!
ஜூல்ஸைக் கண்ட உடன் அந்த சார்ஜெண்ட் கண்களில் கொடூரத் தன்மை மின்னியது...
ஓ டியர்! ஜூல்ஸுக்கு இருக்கு தலைவலி!
கேப்டன் மாத்யூஸ் எதிர்பார்த்தது போலவே ஜூல்ஸை முன்னே வரும்படி சைகை செய்தான்...
உன்னிடமிருந்து பயிற்சியைத் துவக்குகிறேன் பயலே!


மோதலுககு சார்ஜென்ட் மான் தயாராகி நின்ற போது ஒரு மேலதிகாரி அங்கே பார்வையிட நின்றார்-
ஆயுதத்துடன் வரும் எதிரியை நீ எப்படி சமாளிக்கிறாய் என்று பார்ப்போம்!
சார்ஜென்ட் திடீரென்று பாய்ந்து பாம்பு கொத்துவது போல துப்பாக்கியின் முனையால் குத்தினன்...
ஆ! மாட்டி விட்டாயா?
சரேல்!
லேசான கீறல் தான் சார்ஜென்ட்!
காயம் பட்ட இடத்தில் ரத்தம் கசிந்தது. மீண்டும் அதேபோல் பாய்ந்து மற்றொரு கையிலும் க்காயமேற்படுத்தினன் தடியன்.
நீ ரொம்ப ஸ்லோ... ஆமை மாதிரி!



காலை எப்படிப் பயன் படுத்துவது என்றே உனக்குத் தெரிய வில்லை!
பாவம். ஜூல்ஸை இவன் சல்லடையாக ஓட்டை போடும் முன் ஏதாவது செய்தாக வேண்டும்!
ஆனால் மாத்யூஸ் கவலைப்பட அவசிய மில்லை! அந்த சார்ஜென்ட் மீண்டும் தாக்க முற் பட்டபோது ஜூல்ஸ் அதிரடியாகப் பாய்ந்தான்-
இது எப்படி இருக்கு?
இதுவும் எப்படி இருக்கு?
அந்த ராட்சஸ உருவம் தரையில் சாய்ந்தது- ஆனால் ஒரு சில நொடிக்குத்தான்!
நீ...நீ...நீ...


மின்னல் போல் எழுந்த அவன் கொலை வெறியுடன்.... கொதித்தான்-
முட்டைப் பூச்சியை நசுக்கு வது போல் உன்னை நசுக்கு கிறேன் பார்! உன்னைக் கொல்லாமல் விட மாட்டேன்! நான்...
போதும் சார்ஜென்ட்! நீ ஆரம்பித்து வைத்ததைத் தான் அவன் முடித்து வைத்தான்!
மிக மிகக் கஷ்டப்பட்டு கோபத்தை அடக்கிக் கொண்டான். அந்த அதிகாரி பாராட்டும் விதத்தில ஜூல்லைப் பார்த்தான்...
துடிதுடிப்பான இளைஞன் நீ! இப்போது நீ செய்தது பிரெஞ்சுக் குத்துச் சண்டை யின் பாரம்பரிய மோதல் முறை! வெல்டன்!
நீ சொல்லித் தான் எனக்குத் தெரியனு மாக்கும்?
ஜூல்லை அவனது இடத்திற்குப் போகும்படி சைகை செய்தார். பின்னர் சார்ஜென்டிடம்-
யெஸ் கர்னல்...
பயிற்சி தொடரட்டும் சார் ஜென்ட். இந்த அணியில் இன்னும் திறமைசாலிகள் யாரேனும் மறைந்திருக் கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்!


சார்ஜென்ட் பார்வையை ஓடவிட்டபோது அவனது பார்வை மிக் மீது நிலைத்து நின்றது...
லேசாக அடித்துப் போடக் கூடிய பயலைத் தேர்ந் தெடுக்க வேண்டும! இவன் சரிப்படுவான் என்று நினைக்கிறேன். அவனுடைய நண்பன் எனக்குச் செய்ததற்கு இவனை பதில் சொல்ல வைக்க வேண்டும்!
மிக்கை முன்னால் வரும்படி சைகை செய்து மோதலுக்குத் தயாரானான்...
என்னிடமுள்ள இந்தத் துப் பாக்கியைப் பறிப்பதே இந்தப் பயிற்சி! முயற்சி செய் பார்ப்போம்!
பாய்ந்து வந்த சார்ஜென்ட்டை மிக் லாவ கமாக ஒதுக்கிவிட்டு துப்பாக்கியை அழுத்த மாகப் பிடித்துக் கொண்டான்...
சுண்டைக் காய் பயலே -ஆட்டமா போடு கிறாய்? உன்னை...
ஆனால் சார்ஜென்ட் தான் சொல்ல நினைத் ததை சொல்லி முடிக்கவில்லை. அதற்குள் வானில் பறந்து கொண்டிருந்தான்-


வெல்டன்! 100க்கு 100 வாங்கி விட்டாய்!
இன்று உனக்கு நாளே சரியில்லை என்று நினைக்கிறேன். சார்ஜென்ட்! பொறுப்பை அந்த அதிகாரியிடம் விட்டுவிட்டு வா! ம்ம்ம்.. க்விக்!
இரண்டு நாட்கள் கடந்தன. அன்றைய தினம் மே 13. அனைவரும் அணி வகுத்து நிற்கச் செய்வதற்கான சங்கு ஒலித்தது- அதைத் தொடர்ந்து வீரர்களின் பூட்ஸ் சப்தம் கிளம்பியது...
எதற்காக இந்த அவசர அழைப்பு?
கர்னல் ஏதோ விசேஷ அறி விப்பை வெளியிடப் போவதாகச் சொன்னார் கள்!


போலி பிரிட்டிஷ் வீரர்களின் பட்டாளம் அணிவகுத்து நின்றது. தலைமை அதிகாரி பேசத் துவங்கினர்....
வீரர்களே - ''பரலோகப் பாய்ச்சல்'' பணிக்கான இறுதி உத்தரவை தலைமையிடம் இன்று தெரிவித்துள்ளது. இந்தப் பெருமை மிக்க பயணத்திற்காகத் தான் நாம் தேர்ந்தெடுக்கப் பட்டு இங்கே நிற்கிறோம்...


நாளை - மே 14ந் தேதி இரவு 10 மணி அடிக்கும் போது நாம் இங்கிலாந்துக்குப் புறப்படுகிறோம்! நமது பணி ''ஹால் போர்டு ஒன்றில்'' பிரிட்டிஷ் வீரர்கள் பயிற்சியில் ஈடுபடும்போது அவர்களிடையே ஊடுருவுவது!


யுத்தத்தின் இறுதிக் கட்டம் நெருங்கிக் கொண்டுள்ளது! அமெரிக்க விமானப்படையும், இங்கிலாந்து விமானப் படையும் இணைந்து அதிரடியாக நம் நாட்டின் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளனர்! எக்கச்சக்கமான பாராசூட் வீரர்களை அதற்காகத்தான் ஹால்போர்டில் தயார் படுத்துகின்றனர்.
ஓஹோ... இது தான் சங்கதியா?


நாசவேலை செய்வதற் கென்றே பயிற்சி பெற்ற 600க்கும் அதிகமான வீரர்கள் இங்கிலாந்தின் தென் பகுதியின் முக்கிய கேந்திரத்தில் இறங்கப் போகிறார்கள்! அசல் யார் - போலி யார் என்று கண்டுபிடிக்கவே முடியாது. போரில் வெற்றியை நெருங்கிக் கொண்டிருக்கும் நம் திட்டத்தைத் தகர்த்து விடுவார்கள்!


தலைமை அதிகாரி மேலும் பல விளக்கங்க ளைச் சொன்னான். இறுதியில் பெருங்குரலில் கத்தினான்-
... இங்கிலாந்தில் உள்ள ஹால்போர்டு தான் நமது வெற்றியின் முதல் படியாகப் போகிறது! ஹால்போர்டு பற்றி உங்களுக்கு நன்றாகவே தெரியும். ஏனெனில் அதனுடைய நகலை இங்கு
உருவாக்கியுள்ளோம். நமது உளவாளிகள் அளித்த போட்டோ -மற்றும் வரைபடங்கள் மூலம் அப்படியே நிர் மாணித்துள்ளோம் - நாம் தோற்க முடியாது! நாம் ஒருபோதும் தோற்கப் போவதில்லை! நம்முடைய தந்தை நாட்டின் தலை விதியே நம் கையில் தான் உள்ளது!


கலைந்து செல்லும்படி உத்தரவிடப்பட்டதும் அனைவரும் தங்களுடைய இடத்திற்கு விரைந்தனர்...
நாம் உயிரோடு திரும்புவதே சந்தேகம்!
இது ஒரு தற்கொலை பயணம் என்றுதான் முன்னரே சொல்லி யுள்ளனரே! அதை ஏற்றுக் கொண்டுதான் நாம் இங்கு வந்தோம்! வாழ்ந்தாலும் - செத்தாலும் உன்னை 'ஹீரோ' என்றுதான் சொல்வார்கள்!


ஒரு மூலையில்...
லண்டனுக்குத் தெரியப் படுத்த வேண்டும்! அதற்கு ஒரே வழி - பிரெஞ்சுப் புரட்சிப்படை மூலம்தான்! அதுவும் இன்று இரவே செய்ய வேண்டும்...
அங்கே பாருங்கள். அந்தத் தடிக் குரங்கு சார்ஜென்ட் வருகிறான்!
சார்ஜென்ட் அவர்களை நெருங்கியதுபோது முகத்தில் கோப ரேகைகள் தாண்டவமாடின...
இன்னும் ஒரு மணி நேரத்தில் அனைவரும் மீண்டும் அணிவகுத்து நிற்க வேண்டும்! நாளை செல்லவிருக்கும் பயணத்திற்காக இன்று இரவு இறுதிக் கட்ட ஒத்திகைப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்!
இரவு நேரப் பயிற்சியா? பிரெஞ்சுப் புரட்சிப் படையுடன் தொடர்பு கொள்ளும் நம்பிக்கையும் போய்விட்டதே! இருட்டும் முன் வெளியில் கம்பி நீட்ட வாய்ப்பில்லை!
சார்ஜென்ட் அவர்களைக் கடந்து சென்றான். அப்போது ஒரு டேட்டி அதிகாரி தென்பட்டான்...
உன்னுடைய ஆங்கில அறிவை விமர்சனம் செய்த டேட்டி ஆபீசர் ஜூல்ஸ்! இவன்தான் நமது ஒரே வழி!


திடீரென்று தோன்றிய ஐடியாவை ஜூல்ஸிடம் மாத்யூஸ் சொன்னார். அதன்படி-
மிஸ்டர் லெப்டினன்ட்
நீ என்ன சொன்னாய்?
லெப்டினன்டிற்குக் கோபம் கொப்பளித்தது..
முட்டாளே! ஜெர்மன் அதிகாரியிடம் பேசுவது போல் என்னிடம் பேசுகிறாய்! எனக்கு ஜெர்மானிய முறைப்படி சல்யூட் அடிக்கிறாய்! உனக்கு ஏதாவது பைத்தியம் பிடித்து விட்டதா?
ஜூல்ஸ் ஆங்கிலத்தில் தப்புத்தப்பான உச்சரிப்புடன் மன்னிப்புக் கேட்டான். அந்த அதிகாரியின் ஆத்திரம் அதிகமானது...
அட ஆண்டவனே! நான் நினைத்ததை விட உன்னுடைய ஆங்கில உச்சரிப்பு மிக மோசமாக உள்ளதே! எந்தப் பிசாசு உன்னை இங்கு அனுப்பி வைத்தது? நாளை விமானத்தில் நீ இங்கிலாந்துக்குப் போனால் காரியத்தைக் கெடுத்து விடுவாய்!
ஜூல்ஸ் அங்கிருந்து அனுப்பப்பட்டான். மாத்யூஸும் மற்றவர்களும் அவனை மீண்டும் பார்த்தபோது வெற்றிக் களிப்புடன் வந்தான்...
எப்படி ஐயாவோட நடிப்பு? என்னைக கர்னல் முன்னால் கொண்டு போய் நிறுத்தினான். அவர் என்னை லாயக்கில்லாத வன் என்று சொல்லி இங்கிலாந்துப் பயணத்திற்கு வரக்கூடாது என்று உத்தரவு விட்டான். நான் உடனடியாக இங்கிருந்து போய்விட வேண்டுமாம்!


மின்னல் படையினர் பயிற்சிக்குப் புறப்பட்ட போது ஜூல்ஸ்-
குட்பை, ஜான் - மிக் - கேப்டன் மாத்யூஸ்! அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கட்டும்!
ஜூல்ஸ் 'மரண மண்டலத்தின்' எல்லைக்கு வந்தபோது- ஒரு மோட்டார் சைக்கிள் காத்திருந்தது-
எனக்கு ஜெர்மன் மொழி லேசாகத்தான் தெரியும். ஆனால் சரளமாகப் பேச இயலாது. அந்த நாஜி களுடன் அதிகம் பேசப் போவதில்லை!
அவனிடம் ஏற்கனவே சொல்லி இருந்தபடி அந்த மோட்டார் சைக்கிளுக்குச் சென்றான். ஒன்றுமே பேசாமல் அதனுடன் இணைக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்தான்.
குட் ஈவ்னிங் நண்பர்களே!


மாலை மயங்கி இருள் சூழந்தது...
சோதனைச் சாவடியி லிருந்து கண்ணில் படாத இடத்திற்கு பைக் செல்லட்டும்!


ஒரு வளைவில் அவர்கள் திரும்பினர். அப்போது ஜூல்ஸ் தனது எந்திரத் துப்பாக்கியை டிரைவரின் விலாவில் வைத்தான்...
ஜெர்மன் பன்றியே... மெதுவாகப் போ! 300 அடிக்கு அப்பால் ஒரு பாதை திரும்புகிறது. அதன் வழியாகப் போ...


அந்த ஜெர்மானியன் வாயைப் பிளந்தபடி ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தான். ஆனுல் அதற்குள் பைக்கும் அதனுடன் இணைக்கப்பட்ட இருக்கை வண்டியும் பள்ளத்தை நோக்கிப் பாய்ந்தது!
ஹேய்... ரோட்டைப் பார்த்து வண்டியை ஓட்டு!


அடுத்த வினாடி மோட்டார் சைக்கிள், டிரைவர் மற்றும் பயணியும் தலைகீழாகப் பறந்தனர்!
ஐயோ!
தொலைந் தோம்!


ஜெர்மானியன் முதலில் எழுந்து நின்றான்...
நீ யார் என்பதோ, உன்னுடைய நோக்கம் என்ன என்பதோ எனக்குத் தெரியாது -ஆனால் முதலில் சுட்டு விட்டுத்தான் பின்னர் கேள்விகள் கேட்பேன்!


அந்த நாஜி கையில் துப்பாக்கியுடன் நின்றான்... ஆனால் ஜூல்ஸ் மின்னல் போல் பாய்ந்தான்...
நோ. உன்னால் முடியாது!


கராத்தே வெட்டு அந்த ஜெர்மானியனை நிலைகுலையச் செய்தது-
கும்!
துப்பாக்கி வெடித்த சப்தம் சோதனைச் சாவடிக்கு எட்டியிருக்கும்! அதிர்ஷ்டம் என் பக்கம் இருந்தால் அது பைக் சத்தம் தான் என்று நம்பி விடுவார்கள்!


ஜூல்ஸ் மோட்டார் சைக்கிளை நிமிர்த்தியபோது அதற்கு அதிக சேதம் எதுவும் ஏற்படவில்லை. மயங்கிக் கிடந்த நாஜியைத் தூக்கினான்..
கொஞ்ச நேரம் பைக்கை நான் ஓட்டுறேன்!


அப்படியே கிட, நாம் போவோம்!
ENS
BOTO


ஆளரவமற்ற அந்த கிராமத்துச் சாலையில் வண்டி பறந்தது. சற்றைக்கெல்லாம் தனித்து நின்றதொரு பண்ணைவீடு தென் பட்டது.
குட்! புரட்சிப் படையினர் விவரித்துச் சொன்னது போல் அப்படியே இருக்கே!


விரைவில் வீட்டின் கதவு திறந்து மூடப்பட்டது...
மிஸ்டர்... இது தலை போகும் அவசர சங்கதி! லண்டனுக்கு எந்தவித தாமதமும் இல்லாமல் எச்சரிக்கை செய்தி ஒன்று அனுப்ப வேண்டும்!


வீட்டின் மாடி அறைக்கு விரைந்தனர்...
செய்தியை என்னிடம் சொல்லுங்கள்- அதை சங்கேத மொழியில் எழுதிக் கொள்கிறேன்! என்னுடைய மகன் செய்தியை அனுப்பி விடுவான்!
இதுதான் அனுப்ப வேண்டிய செய்தி! 'கேப்டன் மாத்யூஸி ட மிருந்து ராணுவ புலனாய்வுத் துறை டைரக்டருக்கு : ஹால்போர்டு இரண்டு பற்றி மிகமிக முக்கியமான தகவல் இருக்கிறது...!


அத்தியாயம் 4 : தற்கொலை படை!
மே 14ந் தேதி இரவு மணி 10 நெருங்கிக் கொண்டிருந்தது. 'ஹால்போர்டு இரண்டுக்கு அருகில் உள்ள விமான தளத்தில் வீரர்கள் வரிசையாக நின்று கொண்டிருந்தனர்...
கமாண்டிங் அதிகாரியின் இறுதி அறிவிப்புக்காக அப்படியே காத்திருங்கள்!
மாத்யூஸ், ஜான் மற்றும் மிக் மூவரும், ஓர் அணியின் கடைசி வரிசையில் நின்று கொண்டிருந்தனர்...
உங்களுடைய தலைமை அதிகாரி பேசுகிறேன். விமானத்தில் நாம் ஏறும் முன்பு உங்களிடம் ஒருசில வார்த்தைகளை மட்டுமே சொல்ல விரும்புகிறேன். இதை மட்டும் நான் ஜெர்மன் மொழியிலேயே சொல்கிறேன்: "ஹோக் டெர் பஹ்ரர்"! "ஹெய்ல் ஹிட்லர்" (✱ வாழ்க பிதா! ஹிட்லர் வாழ்க)
மாத்யூஸும் அவரது தோழர்களும் விமான தளம் முழுவதும் எதிரொலித்த முழக்கத்தில் பங்கேற்றனர்.
வாழ்க பிதா! வாழ்க பிதா! வாழ்க பிதா!
விருப்பத் திற்கு மாறானது தான்! ஆனால் மற்ற வர்களைப் போல சொல்ல வேண்டிய நிலை!


விமானத்தில் ஏறும்படியாக உத்தரவு வந்தது. மாத்யூஸ் கவலையுடன் கை கடிகாரத்தைப் பார்த்தார்...!
நம்முடைய ஆட்களை இன்னும் காணோமே! ஒருவேளை தகவல் லண்டனுக்கே போய்ச் சேர வில்லையா?! ஏதோ தவறு நடந்து விட்டது...!


ஆனால் ''மரண மண்டலத்தின்'' வாயிலில்...
எதிரிகளின் குண்டுவீச்சு விமானங்கள்! கட்டுப்பாட்டு அறைக்கு போன் செய்!
AC


அதற்குரிய பதிலும் விரைவில் கிடைத்தது...
அவைகள் எதிரிகளின் குண்டு வீச்சு விமானங்கள் தான்! நமது விமானப் படையும், விமான எதிர்ப்பு பீரங்கிகளும் அவர்களை இவ்வளவு தூரம்வர அனுமதித்து விட்டனர்!
'இன்று இரவு எந்த ஒரு பிரிட்டிஷ் விமானத்தையும் சுடக்கூடாது- அவற்றினுள் இருப்பது ஜெர்மன் வீரர்கள் தான்! என்று உத்தரவு எல்லா யூனிட்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது!



ஆனல் விமானங்களில் இருந்ததோ ஜெர்மானி-
-யர்கள் அல்ல !
முதல் குண்டு 'ஹால்போர்டு 2' மீது இறங்கியது! அதனைத் தொடர்ந்து மேலும் பல குண்டுகள் வீசப்பட்டன..!
விமான தளம் - தகவல் தொடர்பு மையம்- நாம் எதையும் தவற விட்டு விடக் கூடாது!
டூம்! டூம்!
சில பிரிட்டிஷ் விமானங்கள் ஹால்போர்டு கிராமம் மீது கவனம் செலுத்தியபோது மற்றவை விமான தளத்தை நோக்கி விரைந்து வந்தன...
ஜான் - மிக் - என்னைத் தொடர்ந்து வாருங்கள்!
குண்டு மழை தொடர்ந்தது....
குண்டுகள் கீழே போய் விட்டன!



மாத்யூஸ், ஜான், மிக் மூவரும் விமான ஓடுபாதையில் இருந்து விரைந்து விமான நிலையத்தைச் சுற்றிலும் அமைக்கப் பட்டிருந்த பதுங்கு குழிக்கு ஓடி வந்தனர்...
டூம்!
டூம்!
இங்குதான், க்விக்!
பதுங்கிய நிலையில் பயங்கர ஓசையுடன் பூமியை நடுங்க வைத்த குண்டு வெடிப்பைப் பார்த்தனர்...
நம் அதிர்ஷ்டம் எப்படியோ தெரியலை காப்டன்... நமது நாட்டுக் குண்டுகளே நம்மை தூள் தூளாக்கி விடும் வாய்ப்புள்ளது!
வேறு வழியில்லை மிக்! கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டோம்! நம் உயிருக்கு உத்தரவாதம் ஏது?
மிகவும் தாமதமான நிலையில், பிரிட்டிஷ் விமானம் போல மாற்றப்பட்டிருந்த ஜெர்மன் விமானத்தின் விமானி அதைக் கிளப்ப முயன்றான்...
இந்த ஓடுபாதையில் நிற்பதைவிட வானில் பறப்பது எவ்வளவோ தேவலை கர்னல்!


ஆனால் அந்த விமானம் மேலே எழ முயன்ற போது ஒரு குண்டு அதன்மீது விழுந்தது...
அதைத் தொடர்ந்து விமானம் வெடித்து தீப்பற்றியது...
2 பேர் உயிர் தப்பி யுள்ளனர்! ஒரு ஆள் லெப்டினன்ட் கர்னல்...
மற்றொரு வன் மான் என்று கூறப் படும் அந்த ராட்சஸ சார்ஜென்ட்!
வெடித்த விமானத்திலிருந்து வெளியே வந்த இரு ஜெர்மானியர்களும் வேதனையால் தரையில் சுருண்டு விழுந்தனர்...
ஜெர்மானியர்கள் என்றாலும், தீயில் எரிந்து கருகுவதை நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது!


மூவரும் விரைந்து வந்தனர். ஜெர்மானியர்களை சுவைத்த தீயை அணைத்தனர்...
இந்த ஆள் மயங்கி விட்டான்!
இவனும்தான் கேப்டன்!
இவர்களை நாம் என்ன செய்வது?
நம்முடன் இவர்களைக் கொண்டு செல்ல முடியாது. இங்கேயே விட்டு விடுவோம். ஜெர்மானியர்கள் இவர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகட்டும்!
குண்டுவீச்சு முடிந்து விட்டது. இப்போது இங்கிலாந்து திரும்பிச் செல்ல முதல் கட்டப் பயணத்தை துவக்குவோம்! கமான்!


ஆனால் முரட்டு சார்ஜென்ட் மோசமாகக் காயம் அடைந்திருந்த போதிலும் சுயநினைவுடனே இருந்தான்...
என்ன இழவு! அவர்களுடைய பேச்சைக் கேட்டதிலிருந்து இந்த மூன்று பேரும், நம்முடைய ஆட்கள் இல்லை என்பது புரிகிறது!


எப்படியோ சிரமப்பட்டு எழுந்தான்...
பட்டாளம் முழுவதுமே இறந்தோ அல்லது காயம் பட்டோ கிடக்கிறது! எனவே உதவிக்காகக் காத்திருக்க நேரமில்லை. அவர்களைத் தொடர்ந்து நானேதான் போக வேண்டும்...


தள்ளாடிய நிலையில் வேகமாய்ச் சென்ற அந்த மூன்று உருவங்களைப் பின் தொடர்ந்தான். ஒரே ஒருமுறை அந்த கிராமத்தையும் விமான நிலையத்தையும் திரும்பிப் பார்த்தபோது அலை கொளுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தன...
இதுதான் ஹால்போர்டு திட்டத்தின் முடிவா...?


அவனுக்கு கொஞ்ச தூரத்திற்கு முன்னால்...
அவசியம் ஏற்பட்டாலொழிய நாம் துப்பாக்கியைப் பயன்படுத்துவதில் அர்த்தமே இல்லை ஜான். சோதனைச் சாவடியை அடைந்த உடன், விமானத் தாக்குதல் பற்றி அருகில் உள்ள தலைமையகத்தில் நாம்சொல்லப் போவதாக அங்கிருக்கும் காவலர்களிடம் சொல்!


சோதனைச் சாவடியில்-
அங்கு ஏற்பட்ட சேதம் மிகவும் கடுமை யானதா?
ஆமாம் லெப்டினன்ட்! நானும் எனது தோழர்களும் மட்டுமே தப்பியுள்ளோம். நாங்கள்-


மூர்க்கத்தனமாக ஒரு குரல் அப்போது குறுக்கிட்டது-
அதைக் கேட்ட உடன் காவலர்கள் உஷார் அடைந்தனர்...
அந்த மூன்று பேரும் சொல்வதைக் கேட்டு முட்டாளாகி விடாதே லெப்டினன்ட்! நமது தந்தை நாட்டின் எதிரிகள் அவர்கள்!


என்னுடைய கேள்விகளுக்குப் பதில் வேண்டும்! உங்களில் ஒருவனைக் கொன்ற உடன் தான் நீங்கள் ஒழுங்காக பதிலளிப்பீர்கள்!
ஏன்தான் எரிந்து சாகட்டும் என்று உன்னை விடாமல் வந் தோமோ?



நாஜி சார்ஜென்ட் வெறியுடன் தன் துப்பாக்கியை மிக்கிற்கு நேராகத் திருப்பினான். மறுகணம் துப்பாக்கியின் தொடர் முழக்கம் எழுந்தது...
ரட்-டட்-டட்!
ஐயோ!
ஆனால் வீழ்ந்தது அந்தக் கனத்த சார்ஜென்ட்தான்!
காவலர்கள் எதிர் தாக்குதலுக்கு முனைந்தனர். ஆனால் அவர்கள் மீதும் தோட்டா மழை பாய்ந்து வீழ்த்தியது...
டட்!
ரட்-டட்!
ஜுல்ஸ்! நல்ல காரியம் செய்தாய்! சரியான சமயத்தில் வந்து விட்டாய்!
என் உதவி தேவைப் படலாம் என நினைத்தேன் கேப்டன்.


பொழுது விடிவதற்கு முன்பே புரட்சிப்படையினர் லண்டனுடன் தொடர்பு கொண்டனர்...
என்னுடைய மகன் நீங்கள் திரும்பிச் செல்வதற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டான். உங்களுடன் சேர்ந்து பணியாற்றியது பெருமையாக இருக்கிறது கேப்டன் மாத்யூஸ்- வெறும் நான்கு பேர் மட்டுமே சேர்ந்து இவ்வளவு பெரிய நாசத்தை ஏற்படுத்தி விட்டீர்கள் என்று நினைத்தாலே...
AI 105


மறுநாள் இரவு, பிரெஞ்சு குண்டுவீச்சு விமானங்கள் நார்மன்டி கடற்கரையில் இருந்த ஜெர்மானியத் தற்காப்பு இலக்குகள் மீது தாக்கின...
இந்தத் தாக்குதல் ஜெர்மானியர்களை கொஞ்சம் சுறுசுறுப்பாக்கும்!


தாக்குதல் உச்ச கட்டத்தை அடைந்தபோது இரு சிறிய படகுகள் நதியின் முகத்துவாரத்திலிருந்து அமைதியாகப் புறப்பட்டன...
எல்லாவற்றிற்கும் நன்றி!
பத்திரமாக போய்ச் சேர வாழ்த்துக்கள்! வாழ்க விடுதலை இயக்கம்!

்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடி மாத்யூஸும் ,வரது தோழர்களும் நேசநாட்டுக் கப்பல் ஒன்றை அடைந்தனர்...








*பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக லயன் காமிக்ஸ் மாத இதழை அச்சிடுபவரும் வெளியிடுபவரும், ஆசிரியரும் - S. விஜயன், முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், தபால் பெட்டி எண்: 374, சிவகாசி - 626 123. போன்: 20649*

*அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123.*



# ஜூனியர் ஓ சீனியர்!

கதை: S.விஜயன் ☆ சித்திரம்: சிகாமணி






## வாசகர் கடிதம்

★ **M. சுந்தர்,** **பாளையம்கோட்டை.**

லயனின் பத்தாவது ஆண்டு மலரை மாடஸ்டியின் கதையுடன் நிறைவாக வெளியிட்டு இருக்கிறீர்கள். ''கதை சொல்லும் படங்கள்'' தொடருக்கு ஒரு சூப்பர் ஷொட்டு. உங்களுடைய எழுத்துத் திறமை மிகவும் வியக்க வைக்கிறது. பல அரிய விவரங்களுடன் நிறைவாக இத்தொடரை கொண்டு செல்வீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

★ **G. வெங்கடேஸ்வரன்,** **அருப்புக்கோட்டை.**

லயனின் 10வது வயதிற்கு என் உளங்கனிந்த வாழ்த்துக்கள். மாடஸ்டியின் சாகஸம் வித்தியாசமான முறையில் அமர்களமாக இருந்தது.

★ **K. கருப்பண்ணன்,** **ஆனங்கூர்.**

''மந்திர மண்ணில் மாடஸ்டி'' படித்தேன். 10 வயதை நிறைவு செய்த கதை அருமை. சித்திரங்கள் சிறப்பு. அட்டைப் படம் அசத்தல். மொத்தத்தில் பத்தாவது ஆண்டு மலர் ரியலி சூப்பர்.

★ **M. ராஜவேல்,** **அருப்புக்கோட்டை.**

லயனின் 10வது ஆண்டு மலர் படு சூப்பர். கதை சொல்லும் படங்கள் டபுள் சூப்பர். ''மந்திரவாதி மாண்ட்ரேக்'' தோன்றி 60 வருடம் ஆகிறது என்றவுடன் வாயடைத்து விட்டேன்.

★ **பாரதிநந்தீஸ்வரன்,** **குமாரபாளையம்.**

காமிக்ஸ் என்றாலே சிறுபிள்ளை சமாச்சாரம் என்ற அறியாமை இன்னமும் தமிழகத்தில் இருப்பது 'வேதனையான உண்மை'. காமிக்ஸ்களில் வரும் கோணங்களும், கதையமைப்புகளும், ஹாலிவுட் படங்களுக்கு ஆசிரியர்கள். காலமும், லயன் காமிக்ஸும் அதை உணர்த்தும்!

★ **G. ஆனந்த்,** **தாசநாயக்கன்பட்டி.**

முதல் இதழ் - கத்தி முனையில் மாடஸ்டி

ஐந்தாவது ஆண்டு மலர் - நடுக்கடலில் அடிமைகள் (மாடஸ்டி)

பத்தாவது ஆண்டு மலர் - மந்திர மண்ணில் மாடஸ்டி

இதே போல் ஒவ்வொரு ஆண்டு மலரையும் மாடஸ்டி கதைகளை கொண்டு அசத்துங்கள்.

★ **L. வெங்கடேஸ்வரன்,** **C. அய்யம்பாளையம்.**

''மந்திர மண்ணில் மாடஸ்டி'' படித்தேன். இயல்பாக தொடங்கிய கதை பரபரப்புடன் முடிந்திருக்கிறது. நகைச்சுவை, சோகம், ஆக்ஷன் என அனைத்தும் கலந்த கலவையாய் இருந்தது.




லயன் ஸ்பாட் லைட்!
கதை-வசனம்-சித்திரம்:
வி. முருகவேல், No. 5, பார்வதி நகர், தேனிமலை. திருவண்ணாமலை
காட்டில் ஒரு நாள்...
கசமுசா கசமுசா
அடுத்து...
ஹிம்... பந்து இருந்தால் நல்லாத்தான் இருக்... ஹே... பந்து தட்டற சத்தம்
ஒரு பயல் தட்டிக்கிட்டு வரான் இப்ப பாருங்க என் ஐடியாவ...
இந்த உறுமலில் பயல் பந்தை நிச்சயம் போட்டு விட்டுதான் ஓடுவான்... ஹீ...ஹீ...
ஆ... ஆ.. ஐய்யோ
ஆனால்...
ஆ... பயல் பந்தையும் அல்லவா தூக்கிக் கொண்டு ஓடுகிறான் ம்... நானும் விடப் போறதில்லை!


சிறிது தூரம் ஓடிய பின்...
ஆஹா... இப்படி காலையில் எழுந்து, மரங்கள் அடர்ந்த பகுதியில் சுத்தமான காற்றை சுவாசித்துக் கொண்டு உடற்பயிற்சி செய்வது எவ்வளவு...
அ..அ... அப்பா அப்பா சிங்கம்... து..து...துரத்துது
என்ன சிங்கமா... இப்படி என் பின்னாடி வந்து விடு நான் கவனிச்சிக்கிறேன்...
ம்...ம்...ம்... (அழுகை)
பரட்டை, சிறுவனின் தந்தையை பார்த்ததும்...
யம்மாடி இப்படி ஒரு உடம்பா
அடுத்து நடந்ததோ...
அய்யோய்யோ உலகமே சுத்துதோ
விர்ர்ர்...
ஹி...ஹி... சூப்பர்
பிடியை விட்டவுடன்
ஹே...ஹே... பறக்கும் சிங்கம்
அ...அய்யோ இப்படியா ஒரு மனுஷன் மிருகத் தனமா நடந்துக்குவான்
முடிவில்...
சே... நான் அந்த பந்துக்கு ஆசைப்பட்டிருக்கக் கூடாதுதான். ம்...ம்... (மயக்கம்)

# 105 அட்டைப்படங்கள் + 1 போட்டி = 3 சூப்பர் ப்ளோ-அப்!

வாசக நண்பர்களே,

இதோ ஒரு புதிய போட்டி! இதற்கான பரிசோ உங்கள் அனைவருக்குமே கிடைக்க வாய்ப்புள்ளது! நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான் :

இதுவரை வந்துள்ள நமது 105 லயன் இதழ்களையும் எடுத்துக் கொள்ளுங்கள்! அவற்றின் அட்டைப்படங்களை நிதானமாகப் பாருங்கள்! மிகப் 'பளிச்'சென்று இருக்கும் 3 அட்டைப்படங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் பெயரை ஒரு போஸ்ட்-கார்டில் எழுதியனுப்புங்கள்! majority ஓட்டுக்கள் வாங்கும் 3 டிசைன்களை முழு வண்ண ப்ளோ-அப்பாக 15" x 10" சைஸில் வரும் இதழ்களுடன் ஃப்ரீயாக வழங்கவிருக்கிறோம்!

15 - 10 - '94க்குள் உங்கள் செலக்‌ஷன்களை அனுப்பலாம்!

- ஆசிரியர்



# கதை சொல்லும் படங்கள் - 3

**S. விஜயன்**

சூப்பர் ஹீரோக்களின் வருகை காமிக்ஸ் உலகையே ஒரு கலக்கு கலக்கியது! திரும்பிய திசையிலெல்லாம் ஏதாவது ஒரு வண்ண உடுப் பணிந்த முகமூடி ஆசாமி! சூப்பர்மேன்; பேட்மேன்; பூனைமேன்; எலாஸ்டிக் மேன்; நீல மின்னல்; பொம்மை மனிதன்; ப்ளாஸ்டிக் மேன் - என்று பட்டியல் நீண்டு கொண்டே சென்றது! இவற்றுள் பல அபத்தக் களஞ்சியங்கள்! முக மூடியும் - விசேஷ சக்தியும் கொண்ட ஒரு ஹீரோவை உருவாக்கிவிட்டால் - வெற்றி நிச்சயம் என்ற நப்பாசையில் கற்றுக்குட்டிக் கம்பெனிகளால் உருவாக்கப்பட்ட இந்த இரண்டாம் தர சித்திரக் கதைகள் சீக்கிரத்திலேயே காணாமலும் போயின!




சூப்பர் ஹீரோக்களின் சுற்று முடிந்தவுடன் மீண்டும் துப்பறியும் ஹீரோக் கள் அலை பலமானது! 1946ம் ஆண்டு ப்ளாஷ் கோர்டனை உருவாக்கிய அலெக்ஸ் ரேமண்ட் ரிப் கிர்பி எனும் புதியதொரு துப்பறிவாளரை காமிக்ஸ் உலகிற்கு அறிமுகப் படுத்தினார்! வழக்கமான காமிக்ஸ் ஹீரோக்களைப் போல் இவர் அடிதடி ஸ்பெஷலிஸ்ட் அல்ல! கஷ்டமான கேஸ்களை நிதான

கத் துப்பறிவது இவரது டிரேட் மார்க்! கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் கழிந்தும் இவரது கதைகள் உலகமெங்கும் சக்கை போடு போட்டு வருகிறது!



துப்பறியும் ஹீரோக்கள் வளர்ந்து வந்த அதே சமயம் கௌ-பாய் (குதிரை வீரன்) கதைகளும் தலைதூக்கத் தொடங்கின! **டெக்ஸ் வில்லர்; மிஸ்டர் சில்வர்; சிஸ்கோ கிட்; சோர்ரோ** என்று ஏகப்பட்ட வெற்றித் தொடர்கள்! கௌ-பாய் தொடர்களை நையாண்டி செய்யும் விதத்தில் **''லக்கி லூக்''** எனும் கார்டூன் ஹீரோ 12.6.1947ல் அறிமுகமானார். காலப்போக்கில் கௌ-பாய் தொடர்களெல்லாம் மெருகு குறைந்துவிட்ட போதிலும் **லக்கி லூக்** மிகப் பெரிய சக்ஸசாகி விட்டது!



1940களில் பெரும்பகுதியினை இரண்டாவது உலகப் போர் ஆக்ரமித்துக் கொண்டதால் இராணுவக் கதைகளை எக்கச்சக்கமான கம்பெனிகள் வெளியிடத் தொடங்கின! மிதமான வரவேற்புப் பெற்று இந்தக் கதைகளை இன்னும் கூட சில கதாசிரியர்கள் விடாப்பிடியாகப் பிடித்து வருகின்றனர்!

1950கள் காமிக்ஸ் உலகிற்கு ஒரு குழப்பமான சமயமே! சூப்பர் ஹீரோக்கள் போணியாகவில்லை என்ற நிலையில் திகில் கதைகள் பக்கம் கவனம் திரும்பியது! EC காமிக்ஸ் என்றதொரு அமெரிக்க நிறுவனம் ஏராளமான திகில் கதைகளை உருவாக்கி மார்கெட்டின் முன்னணியில் நின்றது! நிஜமான திறமைசாலிகளைக் கொண்டு பணிபுரிந்த இந்த நிறுவனத்தைக் காப்பியடித்து ஏராளமான 'டுபாக்கூர்' காமிக்ஸ்களும் புற்றீசல் போல் கிளம்பின! சகிக்க முடியாத கோரத்துடன் பல கதைகள் மார்கெட்டிற்கு வந்திட -




அரசாங்கம் தலையிட்டே ஆக வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டது! அதைத் தொடர்ந்து 1954ல் ''காமிக்ஸ் சட்ட திட்டங்கள்'' ஒன்றினை அமெரிக்க அரசு விதித்தது!

1950களின் இறுதிப் பகுதியில் திசையின்றி காமிக்ஸ்கள் தடுமாறிக் கொண்டிருந்தன...! அதாவது - சூப்பர் ஹீரோக்கள் மறுபிறவி எடுத்து வரும் வரை!

1961ல் மார்வெல் காமிக்ஸ் என்றதொரு நிறுவனம் சூப்பர் ஹீரோக்கள் மார்கெட்டினுள் மீண்டும் நுழைந்திட எண்ணியது. (இதே கம்பெனி 1940களில் **''மனித நெருப்பு''** என்றதொரு சூப்பர் ஹீரோவை உருவாக்கி நல்ல வரவேற்புப் பெற்றிருந்தது) சூப்பர் மேனும், பேட் மேனும் மட்டும் எப்படியோ இத்தனை காலம் தாக்குப் பிடித்திருந்த மார்கெட்டினுள் மார் வெல் நிறுவனத்தினர் **''அதிசய நால்வர்''** என்றதொரு காமிக்ஸ் தொடரை அறிமுகப்படுத்தியது. அதன் ஹீரோக்கள் 4 பேருக்கும் - தோல்வியடைந்த தொரு விண்வெளிப் பயணத்தைத் தொடர்ந்து பல விசேஷ சக்திகள் கிடைத் திருப்பதாகக் கதை அமைக்கப்பட்டிருந்தது. முந்தைய சூப்பர் ஹீரோக்

ளப் போல அடிதடியில் மட்டுமே ஈடுபட்டிருக்காமல் - பாதி நேரம் களுக்கிடையில் சண்டை போட்டுக் கொண்டிருப்பர். இந்தக் கோஷ்டி னர். இந்தத் தொடர் பிரம்மாண்டமான வெற்றியடைந்ததைத் தொடர்ந்து ,தன் எடிட்டரான ஸ்டான் லீ ஸ்பைடர்-மேனை அறிமுகப் படுத்தினார்! அதுவும் மிகப் பெரிய வெற்றியடைந்தது அனைவரும் அறிந்த விஷயம்!






1960கள் முழுவதிலும் மீண்டும் ஏராளமான சூப்பர் ஹீரோக்கள் வலம் வரத் தொடங்கினர்! இந்த சமயத்தில் விண்வெளி ஆராய்ச்சிகள் கணிசமான வெற்றி பெற்று மக்களின் கவனத்தை ஈர்த்து வந்து கொண்டிருந்தன...! விளைவு - ? ஏராளமான விண்வெளிக் கற்பனைக் கதைகள்! ப்ளாஷ் கோர்டன் பாணியில் - எதிர்கால உலகில் நடைபெறும் விதத்தில் எக்கச் சக்கமான கதைகள் உருவாகின!

இன்றும் கூட இந்தப் பாணிக் கதைகளே பிரசித்தி பெற்று உலகமெங்கும் வெளிவந்து கொண்டிருக்கின்றன! (ஆனால் - நமக்கென்னவோ அவற்றின் மீது அவ்வளவாக ஈடுபாடு வர மாட்டேன்கிறதே ஏன்?)

அடுத்த இதழில் -

தொடரும்.

**காமிக்ஸ் தொடர் உருவாக்குவது எப்படி?**




''மந்திர மண்ணில் மாடஸ்டி'' இதழில் வெளிவந்திருந்த க்ரைம் க்விஸ் மிக சுலபமாக நமது வாசகர்கள் விடை கண்டுபிடித்து விட்டனர்! ஏராளமான கடிதங்கள்!

குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. **75/-** மதிப்புள்ள Gift Sets பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் :

1) K. T. சதீஷ் குமார்,
   50-A, வில்லாகாடி கோயில்தெரு, காஞ்சிபுரம் - 631 501.

2) R. சான்டியாகோ
   430-C, பாவனை சாவடி தென்புறம்,
   மேட்டுப்பட்டி புதூர், திண்டுக்கல் - 624 002.

3) D. ஜெயகுமார் B.E.,
   8-A, புது காலனி, A. R. லைன்ஸ், பாளையங்கோட்டை - 627 002.

இனி சரியான விடையைப் பார்ப்போமா?

''இன்ஸ்பெக்டர் டேஞ்சர் இரண்டாவது முறையாக சோதனையிட வரும்போது இரும்புப் பெட்டியை மறைத்திருந்த பெயிண்டிங் தலைகீழாக மாட்டப்பட்டிருந்தது. அவசரத்தில் திருடன் - அதுதான் அந்த மொட்டை ஆசாமி பெயிண்டிங்கை தலைகீழாகத் தொங்க விட்டிருக்கிறான்!

*இம்மாத க்ரைம் க்விஸ் (15)க்கு விடை அனுப்ப கடைசித் தேதி:*

**15 - 10 - '94**

*விடையனுப்பும் போது இந்தக் கூப்பன் கட்டாயம் தேவை!*

**க்ரைம் க்விஸ் - (15)**
C/o. பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,
த. பெ. எண் : 374, சிவகாசி - 626 123.

விற்பனையாகிறது

மாயாஜால மன்னன் மாண்ட்ரேக் துப்பறியும்

# நடுநிசிப் பயங்கரம்!



முத்து காமிக்ஸ்

ரூ. 3.50

விறுவிறுப்பான மர்மக் கதை!


சிரிப்பின் நிறம் சிவப்பு
ஆயுதங்கள்
ஆயுதங்கள்
பயிற்சிக் களம்
டிஸ்ஸ்...!
ஆஆஆஹ..
உன்னோட தேன் பானைக்குள்ளே கைவிட்ட கம்மனாட்டி யாருன்னு கண்டுபிடிச்சிட்டேன்னு நினைக்கிறேன்!



# காமிக்ஸ் வாசகர்களுக்கு...

வாசக நண்பர்களே,

சமயம் கைவசம் உள்ள முந்தைய வெளியீடுகளின் பட்டியல் இதோ!

ர் காமிக்ஸ்:

ந்திர மண்ணில் மாடஸ்டி - ரூ. 5/-
டுக்கடல் நரகம் - ரூ. 4/-
ஜஸ்ஸி ஜேம்ஸ் - ரூ. 6/-
கமில்லா மாயாவி - ரூ. 5/-
திரிக்கு எதிரி - ரூ. 3.50
னகக் கோட்டை - ரூ. 3.50
ழுகு வேட்டை - ரூ. 10/-

முத்து காமிக்ஸ்:

8) கொலையுதிர் காலம் - ரூ. 3.50
9) நடக்கும் சிலை மர்மம் - ரூ. 5/-
10) சிங்கத்திற்கொரு சவால் - ரூ. 3.50

மினி லயன்:

11) விசித்திர ஹீரோ - ரூ. 3.50
12) ஒரு காவலனின் கதை - ரூ. 3.50

த்தக விலையுடன் தபால் செலவிற்கு தலா 0-50 வீதம் சேர்த்து M.O. அனுப்பி களைப் பெற்றுக் கொள்ளலாம்.

.P.P. மூலம் பிரதிகள் அனுப்ப இயலாது. தயவுசெய்து V.P.P. மூலம் புக்ஸ் ப்பக்கோரி கடிதம் எழுதாதீர்கள்.

பட்டியலில் உள்ள வெளியீடுகள் தவிர வேறு முந்தைய வெளியீடுகள் எதுவும் சம் இல்லை. முந்தைய வெளியீடுகளுக்கு புக்-மார்கெட்டில் விளம்பரம் வதே ஒரே வழி!

- நிர்வாகி.

**ஆண்டுச் சந்தா**

ஓராண்டுச் சந்தா - ரூ. 50/-

(அரையாண்டுச் சந்தா கிடையாது.
சந்தாவில் ஸ்பெஷல் வெளியீடுகள் இடம்பெறாது)

M.O. அனுப்ப வேண்டிய முகவரி:

பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த.பெ. எண்: 374, சிவகாசி.




இன்ஸ்பெக்டர் டேஞ்சர் எப்படிக் கண்டுபிடித்தார்? மூளைக்கு வேலை சொடுங்கள்!